ஓம்

லக்ஷ்மி

தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதி

பிரசுரித்தி வரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

பத்திராதிபர் : K. S. முத்தையா.

பத்திராசிரியர் : K. S. சுந்தரம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4-JAN 1927
MADRAS

மலர் 4. அக்ஷயஹு மார்கழிமீ 1926 டிசம்பர்மீ இதழ் 5.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	197
2.	புதிய ஆத்தி சூடி	198
3.	இனிய முகம்	199
4.	பார்வை கெடுவது எதனால்?	202
5.	செல்வ மகிமை	206
6.	நீதி பஞ்சகம்	208
7.	பொருளழகு	209
8.	ரகுமாரன்	211
9.	நரி விருத்தக் கதைகள்	214
10.	புத்தபோதம்	224
11.	புதிய மந்திரிகள்	238
12.	லக்ஷ்மி பஞ்சாங்கம் : மார்கழிமீ தைமீ	239
13.	சித்தர்கள் ஓரை சாஸ்திரம்	240
14.	பல சில குறிப்புகள்	241

லக்ஷ்மி துதி

நிறைகின்ற பூரணனு நெடுமாலக
னெஞ்சகத்தில்
உறைகின்ற நீ யென்றன் உண்மை
யுளியாது முணர்கிலையோ
வறைகின்ற பாடல்கட் கென்றோர்
பரிசு மருள்கி லையோ
மறைகின்ற நுண்ணிடைச் செம் பொன்
வெற்பாங் கஞ்சமா மகளே.

3L
N284 A
N26'4'5

Lakshmi Book Depot.

நாவல் எழுதுவதில் பெயர் பெற்ற

வடுவூர்—கே. துரைசாமி ஐயங்கார் B. A.

அவர்களால் எழுதியவைகள்.

—∞⁂∞—

		ரூ.	அ.
மாயாவிநோதப் பரதேசி ஷை	1-ம் பாகம் 2-ம் பாகம்	5	0
விலாஸவதி ஷை	1-ம் பாகம் 2-ம் பாகம்	3	0
மதனகல்யாணி ஷை ஷை	1-ம் பாகம் 2-ம் பாகம் 3-ம் பாகம்	4	8
பூர்ணச் சந்திரோதயம் ஷை ஷை ஷை	1-ம் பாகம் 2-ம் பாகம் 3-ம் பாகம் 4-ம் பாகம்	7	8
சௌந்திரக் கோகிலம் ஷை	1-ம் பாகம் 2-ம் பாகம்	3	12
மேனகா ஷை	1-ம் பாகம் 2-ம் பாகம்	3	0
கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பர சாமியார் ஷை	 1-ம் பாகம் 2-ம் பாகம்	3	0
பாலாமணி அல்லது பக்காத் திருடன்		2	8
வஸந்த மல்லிகா		1	8
வித்தியாசாகரர்		1	4
திலோத்தமா		0	12
மாணிக்க வாசகர்		0	8
கனகாம்புஜம் அல்லது கள்வனும் விலை மகளும்		2	12
வஸந்த கோகிலம்		1	0
மாயா சுந்தரி		0	12
திவான் லொடபடசிங் பகதூர்		0	12

ST BOX No. 99.
dappa Naick St.,

MADRAS.

லக்ஷ்மி புஸ்தகசாலை.

இனிய தமிழ் நாவல்களும், கதைகளும்.

ஸ்திரீ புருஷ ரகசியம்	...	1	8	0
கப்பற் கொள்ளைக்காரர்கள்	...	1	4	0
இல்லற இன்ப ரகசியம்	...	0	10	0
ஆனந்த மேகன்	...	1	8	0
சுவர்ணம்புஜம்	...	0	8	0
பண்டிதை மெஸ்மெரிஸ்ஸா	...	1	8	0
விஷதாரி	...	1	4	0
பத்மநாபன்	...	0	14	0
தாரா	...	0	10	0
மர்மமுகி	...	0	12	0
கபட சந்நியாசி	...	0	14	0
வஜ்ர லேகை	...	1	4	0
தீனதயாளு	...	0	12	0
பாணபுரத்து வீரன்	...	1	0	0
ராஜ ராஜேஸ்வரி	...	1	8	0
பீமராவ்	...	0	10	0
ஜீஜாபாய்	...	1	4	0
கோமளா அல்லது கைலாசய்யரின் கெடுமதி	...	0	12	0
வேதவல்லி	...	0	5	0
குணசுந்தரம்	...	1	4	0
பாலசுந்தரம்	...	1	0	0
வல்லப நாச்சியார்	...	1	4	0
கலாசுந்தரி	...	0	12	0
பத்மலோசனி	...	0	12	0
ராஜாமணி	...	0	12	0
ஸ்ரீ வீரராகவ௱	...	0	8	0
மதுராம்பாள்	...	0	12	0
பரிமளா	...	1	0	0

மதிமோச விளக்கம்

தென்னிந்தியாவில் நடை பெறும், சோதிடர் சூழ்ச்சி, பூசாரிப்புரட்டு, வைத்தியர் மோசம், வக்கீல் அலங்கார சூழ்ச்சி மோசங்கள் முதலியவைகளை விரிவாக எடுத்துக் காட்டுவது.

விலை ரூ. 1 0

தபால் பெட்டி, 99
188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மத

A

இனிய தமிழ் நாவல்களும்,

ராவ்சாகிப் T. M. பொன்னுசாமி ப்

இயற்றியவை

	ரூ.	அ.	
சிவஞானம்	1	4	ஞானப்பிரகாசம்
ஞானசம்பந்தம்	1	4	கமலாக்ஷி
ஞானம்பிகை	1	8	விஜய சுந்தரம்

ராவ்சாஹிப்

P. சம்பந்த முதலியார் அவர்கள் B. A., B. L. இயற்

தமிழ் நாடகங்கள்

	ரூ.	அ.		ரூ.	அ.
பேயல்ல பெண்மணியே	0	8	காதலர் கண்கள்	0	12
காலவரிஷி	0	8	மெய்க்காதல்	0	12
யயாதி	0	8	சத்ருஜித்	0	12
கோனேரி அரசகுமாரன்	0	8	வணீபுரவணிகன்	0	12
முற்பகல் செய்யின்			லீலாவதி சுலோசனு	0	12
பிற்பகல் விளையும்	0	8	மனோகரன்	0	12
வேதாள உலகம்	0	8	கள்வர் தலைவன்	0	12
ரஜபுத்திர வீரன்	0	8	சுந்தரி	0	12
பிரஹசனங்கள்	0	8	வள்ளிமணம்	0	12
நற்குலதெய்வம்	0	8	இரண்டு நண்பர்கள்	0	14
சாரங்கதரான்	0	8	ரத்னுவளி	0	14
சிறுத்தொண்டர்	0	8	ஹரிச்சந்திரன்	1	
கீதமஞ்சரி	0	8	புத்தர்	1	
சந்திரஹரி	0	8	சபாபதி 1 & 2		
மார்க்கண்டேயர்	0	10	விரும்பிய விதமே		
பொன் விலங்குகள்	0	10			

கண்ணகியின் சாபம்

அழகிய தமிழ் நடையுடன் எழுதப் பட்ட புஸ்தகத்தைப் படித்து அநேகர் டிராமா நடத்துகி கள், தன் ஆசிரியர் P. S. முருகேச முதலியா ரவர்கள். வி அணு 8

ஆயிரம் தலை வாங்கிய அதிசய சிந்தாமணி

பிரபஞ்ச அநுபவங்களும் இயற்கையின் உண்மைகளும் உலக அதிசயங்களும் ஆழ்ந்த கற்பினைகளும் ததும்பிய இனிய தமிழ் நாவல். விலை ரூபா 1.

லக்ஷ்மி புஸ்தகசாலை, 188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,

தபால் பெட்டி 99 மதராஸ்.

ni Book Depot.

பழமொழித் திரட்டு

காலந் தொட்டே தமிழ்நாட்டில் வழங்கும் பழ
சிறந்தவைகளை ஒன்ருகத் திரட்டி அச்சிடப்
விலை அணு 3.

நடராஜப் பத்து

..ராஜப் பத்து, நடராஜர் பதிகப்பஞ்சகம், தில்லை
ஜர் பதிகம், இம் மூன்றும் ஒரே புத்தகத்தில் சந்தி பிரித்து
ளஸ் கடிதத்தில் திருத்த முற அச்சிடப்பட்டது.
விலை அணு 2.

கந்தரலங்காரம்

இதில் கந்த்ரலங்காரம், கந்தர் சஷ்டி கவசம், சத்ரு சங்கார வேற்பதிகம், அகத்தியப் பஞ்சகம் முதலியவைகள் அடங்கி இருக்கிறது. கிளேஸ் கடிதம். விலை அணு 4.

திவான் லொடபடசிங் பகதூர்

என்ற

வேடிக்கையான பெயர் கொண்ட ஒரு புதிய நாவல் வெளியாகி இருக்கிறது. நாவலின் பெயரே இதில் வேடிக்கைகளும், ஹாசியங்களும், தந்திரங்களும் ஏராளமாக நிறைந்திருப்பதற்கு அறி[illegible]றியாகும். இது ஸ்ரீமான் வடுவூர் கே. துரைஸாமி ஐ[illegible] அவர்களால் இப்போதே புதிதாய்த் தயாரிக்[illegible]ப்பட்ட[illegible] அருமையான நாவல். பூலோக விந்தை என்ற [illegible] பரு[illegible] ஸ்தானத்தில், மகாராஜா, திவான், ஜனங்கள் [illegible]ாரையும் அவர் சுமார் 10 வருஷ காலம் வரையில் [illegible] காள்ளை யடிப்பது விந்தையிலும் விந்தை. இது தே[illegible]திகள் அவசியம் படிக்க வேண்டிய புஸ்தகம். இது [illegible]க்கப் படிக்க ஆநந்த முண்டாக்கும் விநோதக் களஞ்சியம். [illegible]தை [illegible]ரே பாகத்தில் முடிகிறது; உயர்ந்த பேதர் வெயி[illegible] கா[illegible]தில், அழகான ஆப்டோன் படத்துடன் தயார[illegible]ருக்கிறது. விலை அணு 0 12 0

கலாசுந்தரி அல்லது அந்தரங்க அதிசயங்கள்.

இஃது நாகை வி. தண்டபாணி பிள்ளை அவர்களால் எழுதப்பட்டது. மீன் வர்ணனை, ரயில் சம்பாஷணை, சித்திரக் குள்ளனின் சில்மஷம், பாட்டுக்கச்சேரி முதலியவைகள் அடங்கியுள. விலை அணு 12.

POST BOX No. 99.
188, Govindappa Naick St., MADRAS

பச்சை மோதிரத்தின் மர்மம்

காதல் ததும்பும் இனிய அற்புதமான தமிழ் நாவல். படிப்பவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தையும் ஆனந்தத்தையும் அளிக்கக் கூடியது. புதிதாக வெளியா யிருக்கிறது. சுத்தப் பதிப்பு.

விலை ரூ. 1.

மணிவடக் களவு

பட்டப் பகலில் போலீசார் முன்னே ஒரு இரத்தின மாலையைத் திருடி மறைந்த ஒரு சுந்தர மாதின் தந்திரச் செயல்களை விளக்கும் ஓர் அற்புதமான துப்பறியும் கதை.

விலை அணா 4.

பங்கஜம்

இது ஒரு அழகிய சிறு கதை. தெள்ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டது. வயது முதிர்ந்தவர்கள் இளம் பெண்களை விவாகம் செய்வதால் ஏற்படும் இடுக்கண்களை விரிவாக எடுத்துக் கூறுவது.

விலை அணா 2.

குயில்மொழி

ஒரு சிறுமியைப் பற்றிய சிறப்பான கதை. தமிழ் நா... சிறுவர் சிறுமிகளுக்கு இதைவிட மன வெழுச்சியைக் ... கக் கூடிய கதை இல்லவே இல்லை.

வில...

எனது காங்கிரஸ் யாத்திரை

இந்தியாவின் சுதந்திரத்தை விரும்புவோ... யம் படித்தறிய வேண்டிய நூல். தற்காலத்... களின் தன்மையை வெட்டனத் திறந்து காட்டு... நடை.

வில...

லக்ஷ்மி தாலாட்டுக் கோவை

நான்கு விதத் தாலாட்டுகள் அடங்கியது. தமி... ...ாட்டுத் தாய்மார்களுக்கு ஏற்றது.

...ணா 3.

மனோகரி

இது பெயருக் கேற்பவே ஒரு மனோஹரமான நாடகம். கற்பின் மகிமை, புருஷ தம்பதிகளின் சுக வாழ்வின் ரகசியங்கள், இல்லற தருமங்கள் முதலியன இதில் தெளிவுற விளக்கப்பட்டுள்ளன.

விலை அணா 8.

லக்ஷ்மி புஸ்தகசாலை, 188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

தபால் பெட்டி, 99 — **மதராஸ்.**

Lakshmi Book Depot.

விசித்திர தேவலோகக் கோர்ட்டு

இங்கிலாந்துக்குப் போய் அங்கே உயர்தரப் பரீட்சைகளிற் தேர்ச்சி யுற்று வரும் தமிழ் நியாயாதிவாதிகள் தங்களது தாய்ப் பாஷையாகிய தமிழை மறந்து கோர்ட்டுகளில் பேசுகிறதையும் எழுதுகிறதையும் மிகு விநோதமாகத் தெரிவித்திருக்கிறது. இது படிப்பவர்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்கும். விலை அணா 0 8 0

சரீர மர்ம சாஸ்திரம்

(ஒரு மானிட இன்ப நூல். 5ம்-பதிப்பு.)

தமிழ் பாஷையில் இவ்வளவு பூர்ணமான இரகசிய சாஸ்திரம் இதுவரையில் எவராலும் பகிரங்கமாய் வெளியிடப்படவில்லை. இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும், அவர்களது அவயவங்களின் அமைப்பும், அவைகளின் நேர்மையான உபயோகங்களும் ரதி மன்மத சிருங்கார ரஹசியங்களும், ஆண் பெண் சிசு ...ம்பத்தி விபரமும், ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதி...ம், அதை போக்கத் தக்க சிகிச்சைகளும், மஹரிஷிகளால் ...ாக ஆதியில் எழுதிய இல்லற இன்பங்களும், விவாக...ர்களுக்கும், இனி மேல் விவாகஞ் செய்துக்கொள்ளும் ...றுமிகளுக்கும் இன்றியமையாத நூல். 64 சித்திரப் ...ன் கூடியது. விலை ரூ. 1 0 0

...ணவாழ்க்கையின் மர்மங்கள்

...க்கோகக் கோலம் என்னும் நூலின் விரி நூலா... ...வ்வொருவரும் அநுபவிக்க வேண்டிய இன்ப சுகம் ...மாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அநேக படங்களு...ன் கூடியது. விலை ரூ. 2 4

அத்யாத் ராமாயணம்

வி...த்திர மகா ரிஷியால் அருளிச் செய்தது. தமிழ் வசனம்... விலை ரூபா 2 8 0

சம்பூரண ராமாயணம்

இது வால்மீகி சுலோகம், கவியின் விருத்தம், திவ்ய பிரபந்த விருத்தத்துடனும், கீர்த்தனை, இந்துஸ்தான், பார்விவர்ணமெட்டுகளமைந்த பாட்டுகளுடனும் சம்பூர்ணமாக எழுதியிருக்கிறது. சம்பூரண ராமாயணம் பாராயணம் செய்பவர்களுக்கு மிகுந்த பிரயோஜனமுள்ளது. விலை ரூபா 1

POST BOX No. 99.
188, Govindappa Naick St., **MADRAS.**

லக்ஷ்மி புஸ்தக சாலை,

கருப்ப சாஸ்திரம்

இதில் சுமார் 250 விஷயங்கள் அடங்கியிருக்கின்றன

இதில் காலமறிந்து கலியாணஞ் செய்யு முறையும், பாலிய விவாகத்தின் கெடுதி யுணரு மார்க்கமும், தேகபலம் வீரிய சக்தி முதலியனவுள்ள சந்ததிகளை யடையும் விதங்களும், கர்ப்பத்தி லிருப்பது ஆண் பெண் ஆகிய இரண்டினுள் இன்ன தென்றறி முபாயமும், தம் மனோபாவனையின்படி ஆண் பெண் உற்பத்தி யாக்கிக்கொள்ளுந் தன்மையும் ஸ்திரீ புருஷர் மலடாவதின் காரணமும் இன்னும் இவைபோன்ற பற்பல விஷயங்கள் விபரமாக எடுத்துக் காட்டி யுள்ளன.

அநேக படங்களுடன் கூடியது. விலை ரு. 1 8 0

சுந்தரலிங் (அல்லது) பாஸ்கர விலாஸ் படுகொலை

ஆச்சரியத்தையும் புத்தி சூக்ஷமத்தையும் உண்டாக்குவதில் இதற்கு இணை எதுவும் இல்லை யென்றே கூறலாம். பாஸ்கர வம்சத்தவர்கள் ஒன்றன் பின் ஒருவராய் கொல்லப் படுவதும் கடைசியாக துப்பறியும் சிங்கம் சுந்தர்லிங் கொலையாளியைக் கண்டு பிடிப்பதும் படிக்கப் படிக்க இனிமையா யிருக்கும்.

இதன் விலை ரூபா 1—8—0.

பாய் பரமானந்தன்

நவீனங்கள் மலிந்து விளங்கும் நமது நாட்டில் தேச பக்தியைப் புகட்டக் கூடிய நவீன புஸ்தகம் இது. தேச பக்தர்களுக்கு அறிவை விளக்கி ஆனந்த மளிப்பது. விலை ரூபாய் 1

மஹேந்த்ர ஜாலம்

ருஷ்யா தேசத்தின் வனாந்தரப் பிரதேசங்களில் ஜனித்து, பால்யத்திலிருந்தே, ஸ்திரி லோலனா யலைந்து பாதிரி வேடம் பூண்டு, உயர்குலப் பெருமாட்டிகளையும், குற்ற மற்ற இளங் கன்னிகைகளையும், கற்பழித்து, ருஷ்ய அரச குடும்பத்தையும், தனது மாயவலைக் குட்படுத்தி ராஜாங்கத்தில் உயர்பதவி யடைந்து அந்நாட்டையே கறங்குபோல் ஆட்டி யலைத்த ரஸ்புட்டின் என்னும் பெரிய மாய ஜாலச் சண்டாளன் ஒருவனது ஜீவிய சரித்திரம். படிக்க மிகவும் ருசிகரமா யிருக்கும்.

இதன் விலை அணா 0 12 0

தபால் பெட்டி 99,
188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்.

Lakshmi Book Depot.

"தையல் சுந்தரம்"

அழகிய அமைப்புக்களுடன் கூடிய இனிமையான தமிழ் நாடகங்களுள் முதன்மை பெற்ற நாடகமாகுமிது. சுருங்கச் சொல்லின் இது பால் போல் ருசிப்பது! தேன் போல் இனிப்பது!! அணுவளவும் திகட்டாதது!!! உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. சொற்ப பிரதிகளே கைவசமுள்ளன. ஆலசியம் செய்வது ஏமாறச் செய்யும்.

விலை ரூபா 1 0 0

"சுந்தரவதனி"

அல்லது

தர்மமே ஜெயமளிக்கும்,

(ஓர் இனிய துப்பறியும் நவீனம்)

நவீன கதைகளை அதி ஆர்வத்துடன் வாங்கி வாசிக்கும் நண்பர்களுக்கு இந்நாவல் நல்ல விருந்தாகும். கதா நாயகியான சுந்தரவதனி படுந்தொல்லைகளும், கடைசியில் தர்மமே ஜெயிப்பதும் படிக்கப் படிக்கப் பரமானந்தத்தையும், பரமாச்சர்யத்தையும், உண்டு பண்ணும். பல துப்பறியும் நாவல்களில் தீரராய் விளங்கும் கஜபதிக்கு விவாகம் நேர்வதும் இந்நாவலில் தான். இதில் இன்சுவையும் எளிய நடையும் ததும்பி நிற்பதால் அனைவர்க்கும் இது ஆனந்த மளிக்குமென்பதிற் றடையில்லை. தடிப்பான காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டிருக்கும் இப்புத்தகத்தின் விலை அணா 0 12 0 தான்.

லக்ஷ்மி பைண்ட் புஸ்தகம்

லக்ஷ்மி மூன்றாம் வருடத்து அதாவது, மலர் 3, நம்பர் 1 முதல் 12 ஸஞ்சிகைகளும், ஒன்றுசேர்த்து மிகவும் அழகாகப் பைண்டு செய்துள்ளது தயாராக இருக்கிறது. வேண்டுவோர் வரவழைத்துக்கொள்ளலாம். அறிவைக் கொடுக்கும் அநேக விஷயங்கள் அடக்கியுள்ளன.

மலர் 3 பைண்டு செய்த புஸ்தகம் 1-க்கு	ரூ.	3	0	0
மலர் 1 ,, ,, ,,	ரூ.	3	0	0

குறிப்பு :—மலர் இரண்டு பைண்டு செய்தது இல்லை. செலவாகி விட்டன.

POST BOX No. 99.
188, Govindappa Naick St., **MADRAS.**

திருப்தி இல்லாவிடில் பணம் வாபீஸ்
சங்கராந்திக்காக குறைந்த விலை ரூ. **6 8 0.**
பௌன்டன் பேனாவும் தபால் சார்ஜும் இனாம்



22-காரட்டு ரோல்டுகோல்டு ரிஸ்லெட் கைக்கடியாரம் 5-வருஷம் உத்தரவாதம் உறுதியான சாமான்களால் செய்தது.

அழகிய சிறு சைஸ். சரியான மணி காட்டும். நெடுநாள் உழைக்கும். இதில் நாலு மூலை, எட்டு மூலை, பீப்பாய் வடிவம், சவுக்கம், சதுரம் எந்த ஷேப்பில் வேணுமென்றாலும் அனுப்பப் படும். விலை ரூபா **8 6 0** தான்.

F.M.S. ஆர்டர்கள் தபால் கூலி உள்பட ரூபாய் **8-0-0** முன் பணம் அனுப்பவேண்டும்.

இம்பீரியல் ஏஜென்ஸி,
மிண்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

மதன லீலா விநோதம்! சிற்றின்பக் களஞ்சியம்!!

30-வருஷங்களாகப் புகழ்பெற்றுக் கிழவனைக் குமரனாக்கும் ஸ்ரீ சதானந்த யோகீஸ்வரர்

மதன விநோத சிந்தாமணி லேஹியம்

சாப்பிடுங்கள். இதை எக் காலத்திலும் சாப்பிடலாம். பத்தியமில்லை. 104-அபூர்வ மூலிகைகளும் இன்னும் விலை உயர்ந்த கடைச் சரக்குகளும் சேர்ந்திருக்கின்றன. சகல மேக ரோகங்கள், மூலரோகங்கள் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கும். பரீக்ஷித்தவர்கள் பலன்கண்டிருக்கிறார்கள்.

96-வேளை லேஹியமும் அயக்காந்த செந்தூரமும் தங்க வெள்ளி ரேக்குடன் தபாற் கூலி உள்பட ரூ. **4.** வி.பி. சட்டமில்லாத மலாய் நாட்டவர்கள் ரூ. **5-8-0** முன் பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ சதானந்த யோகி ஔஷதாலயம்

பார்க்டவுன் போஸ்டு,
மதராஸ்.

வைத்தியம், ஜோசியம்

ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகளின் கபக்ஷயரோக
நிவாரணி மாத்திரைகள்.

இந்த கப மாத்திரை எவ்விதமாகிய கப சம்பந்தமான இருமலும், பொடி இருமலும், சதா கோழையுடன் இருமலும், சிற்சில சமயம் கபமும், இருமலும் எத்தனை வருஷகாலமாய் இருந்தாலும், இதை 7 நாள் காலை மாலை தேனில் குழைத்து சாப்பிட்டு வந்தால் குணமாகும். 7 நாள் 14 வேளை சாப்பிட மருந்து மாத்திரை சார்ஜ் ரூபா 5—4—0 மற்ற விபரங்களும் பத்தியம் முறைகள் மருந்துடன் கேட்லாக் வரும்.

1. குழந்தைகளுக்கு சகல தோஷம் நிவர்த்திசெய்து ரட்சை முடிகயிறு அனுப்ப ரூபா 2—8—0.

2. பொதுவாய் பலன்களும் நட்சத்திர விஷயமாய் எழுதி அனுப்ப ரூபா 2—0—0.

3. ஜாதகத்துக்கு திசை, புத்தி பலன்கள் எழுதி அனுப்ப ரூபா 5—0—0. V. P. மூலமாய் அனுப்ப சார்ஜ் பிரத்தியேகம். ரட்சை கயிறுக்கு முன் பணம் அனுப்பவேணும்.

அநேக தங்கமேடல்கள் பரிசுபெற்ற

வைத்திய ஜோசியர் குப்புசாமி முதலியார்,

25, விநாயக மேஸ்திரி வீதி, ஜி. டி. சென்னை.

இதுவே தக்க சமயம்!

$3\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு 'பங்கஜம்' என்ற இனிய தமிழ் நாவலும், 12 ஷீட்டுகளுள்ள 1927ஆம் அழகிய காலண்டரும் இனாமாய் அனுப்பப்படும்.

விலாசம் :— வ. கிருஷ்ணஸ்வாமி சர்மா,

11, சின்னப்ப முதலி வீதி, மஞ்சக்குப்பம்,

Cuddalore.

இராஜா கோபீசந்த்

பாரத புத்திரர்களுக்கு இன்றியமையாத நூல்! இச் செந்தமிழ் நவீனத்தின் அமைப்பு வெகு நேர்த்தி! சந்தர்ப்பத்திற்கேற்ப ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ள பாடல்கள் அகமுருகத்தக்கவை! இந் நூல் புகட்டும் நீதிகளோ எண்ணிலடங்கா! இது பார்ஸீ, இந்து நாடக கம்பெனிகளால் நடிக்கப்பெற்று உலகப் பிரசித்தியடைந்துள்ளது. நீங்களறியாததன்று! ஹிந்துக்களாகிய நம்மவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் அவசியம் இருக்கவேண்டியது!

விலை அணா **12** தான்.

குழந்தைகள்

வீட்டில் :: :: விளையாட

எங்கள்

பித்தளை விளையாட்டு சாமான்களை உபயோகிங்கள்.

அழுகின்ற குழந்தைகளுக்கு இச் சாமான்களைக் கையில் கொடுத்தால் உடன் அழும் குரலை நிறுத்திவிடும். கண்ணால் பார்த்ததும் குழந்தைகள் ஓடோடியும் வந்து பெற்றோர்களுக்குத் தொந்தரவு கொடுக்காமல் சமையலறை சாமான்களை ஒத்த இச் சாமான்களை எடுத்து சென்றுவிடும். தாய், தகப்பன்மார்கள் கொண்ட எரிச்சல் நீங்கி குழந்தைகள் மேல் ஆசை வந்துவிடும்.

ஒவ்வொரு செட்டுகளிலும் 32 சாமான்கள் அடங்கி யிருக்கின்றன. இவைகள் எல்லாம் முற்றிலும் பித்தளையினால் செய்யப்பட்டுள்ளன. மிகுந்த பள பளப்போடு கூடியவை.

நெ. 1. செட் 1-க்கு விலை ரூபா 4—8—0
நெ. 2. ,, ,, ரூபா 3—4—0

கே. எஸ். முத்தையா கம்பனி,

சில்க் ஹவுஸ் :: :: பனாரஸ் ஸிட்டி.



டாக்டர். சுப்பராயன்
M.A., B.C.L., (OXON); L.L.B., (LON
L.L.B., (T.C.D.)
(முதன் மந்திரி.)

ஸ்ரீமான் A. ரங்கநாத முதலியார்.
(238-ம் பக்கம் பார்க்க).

210364
சென்னை-600 008

நேயர்களின் கவனிப்பு

சந்தா விவரம்.

இந்தியா, பர்மா, ரங்கூன், சிலோன் முதலியன உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2 0 0
சிங்கப்பூர், பினங்கு, ஆப்பிரிக்கா முதலியன போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2 8 0

ஜீவியசந்தா உள்நாடுகளுக்கு ரூ. **40.**
,, வெளி ,, ரூ. **50.**

உள்நாடு தனிப்பிரதி விலை அணா **3.**
வெளிநாடு ,, ,, **4.**

நமது லக்ஷ்மி ஒவ்வொரு மாதம் 30-ந் தேதியிலும் வெளியாகும்.

எப்பொழுது சந்தா நேயர்களாகச் சேர்ந்தாலும் அந்தந்த மலரின் முதல் ஸஞ்சிகையி லிருந்தே அனுப்பப்படும்.

பத்திரிகை நேயர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறிப்பிட்ட தேதியில் கிடைக்காவிட்டால் இந்தியாவிலுள்ள நேயர்கள் 10 தேதிக்குள்ளும் கப்பல் பிரயாணத்தையுடைய நாடுகளிலுள்ள நேயர்கள் 15-தேதிக்குள்ளும் சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும்.

எவ் விஷயத்தைப்பற்றி ஆபீஸுக்கு லட்டர் எழுதினாலும் சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும். சந்தா நம்பர் லக்ஷ்மியின் கவரில் குறிப்பிட்டிருக்கும்.

லக்ஷ்மியில் பிரசுரிப்பதற்கு விஷயங்கள் அனுப்ப விரும்பும் நேயர்கள் ஒவ்வொரு மாதம் 15-தேதிக்குள் மையினால் எழுதியனுப்ப வேண்டும்.

நேயர்கள் இடம் விட்டு இடம் மாறினால் மாறுதல் விலாசத்தை 25-ந் தேதிக்குள் சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும்.

லக்ஷ்மியில் உள்ளூர் விளம்பரங்களும், வெளியூர் விளம்பரங்களும், பிரசுரிக்க எடுத்துக் கொள்ளப்படும். சார்ஜ் விஷயமாக, ஆபீஸுக்கு எழுதியாவது நேரிலாவது பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர் :— லக்ஷ்மி ஆபீஸ்,
தபால் பெட்டி 99
188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,
டெலிபோன் 2692 மதராஸ்.

புதிய ஆத்திசூடி.

(பாரதி)

முனையிலே முகத்து நில்
மூப்பினுக் கிடங் கொடேல்
மெல்லத் தெரிந்து சொல்
மேழி போற்று
மொய்ம்புறத் தவஞ் செய்
மோனம் போற்று
மௌட்டியந் தனைக் கொல்
யவனர் போன் முயற்சி கொள்
யாரையு மதித்து வாழ்
யௌவனங் காத்தல் செய்
ரஸத்திலே தேர்ச்சி கொள்
ராஜஸம் பயில்
ரீதி தவறேல்
ருசிபல வென்றுணர்
ரூபஞ் செம்மை செய்
ரேகையிற் கனி கொள்
ரோதனந் தவிர்
ரௌத்திரம் பழகு
லவம்பல வெள்ள மாம்
லாகவப் பயிற்சி செய்
லீலை யிவ் வுலகு
உலுத்தரை யிகழ்
லோக நூல் கற்றுணர்
லௌகிக மாற்று
வருவதை மகிழ்ந்துண்
வான நூற் பயிற்சி கொள்
விதையினைத் தெரிந்திடு
வீரியம் பெருக்கு
வெடிப்புறப் பேசு
வேதம் புதுமை செய்
வையத் தலைமை கொள்
வௌவுதல் நீக்கு

முற்றிற்று.

இனிய முகம்

(சேந்தமங்கலம், கி. வா. ஜெகநாதன் எழுதியது)

உலகில் மக்கட் பிறப்புட் டோன்றியார் யார்க்கும் சிறப்புப் பொருளெனக் கோடும் மனித உடலம் பல்வேறு செவ்விய திறம் சேர்ந்த உருப்புகளா லாயது. தூய்மை உடைய உருப்புகள் பல சேர்ந்து தூய உடம்பு இலங்குகிறது. அழகு மலிந்த உடம்பில் அழகு சிறந்த பிறப்பினை யுடைய உருப்புகள் இலகும். ஆயினும் ஏனைய உருப்புகள் யாவும் அழகு தரும் வன்மைத் தல்ல. உடலிற் சிறந்த பகுதியாம் முகமே அழகையும் குறிப்பையும் தரும் என்க. ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் வேற்றுமை தோற்றுவது முகமே. ஆகலின் ஒவ்வொரு மனிதனும் தனக்கென வேறு பட்ட முகம் கொண்டுள்ளான்.

அத்தகைய சிறந்த பகுதியாம் முகம் அழகு தவழ்ந்ததெனில் உடலமே அழகுடையது எனக் கூறி விடலாம். அழகு கடவுளின் வரம் என்பது உண்மையே யாயினும் கடவுள் படைத்தன யாவும் வனப்புடையனவே என்பதும் மற்றொரு உண்மை யாகும். ஆயினும் அவ் வியற்கை யழகை மனிதன் தனது செயற்கையைக் கொண்டு அழித்துவிடுகிறான். ஆகலின், எல்லா மனிதனிடத்தும் அழகு தோன்றுவதில்லை. இதற்கு எடுத்துக் காட்டாக மனிதன் செயற்கைக் கரங்கள் புகா இளங் குழவிகள் எல்லோருடைய வதனங்களும் தண்மையும் இனிமையும் பொருந்தி விளங்குவது கண்கூடு. ஆயினும் அதே குழந்தை செயற்கையின் வாய்ப்பட்டு மனித னாகுங்கால், இளமை அழகு நீங்கிவிடுகிறது.

மனிதக் கூட்டத்தினருள் ஆங்காங்கே அழகிய வதனங்கள் மிளிர்கின்றன. சிலருடைய வதனங்களிலே—தேசு—அழகின் புன்னகை—அழகின் வாகனம் தோன்றுவது காணலாம். தேசும், புன்னகையும் அமைதியும் விளங்கி அழகின் முழு விளக்கத்தோடு துலங்கும் முகங்கள் உலகிற்கு இன்ப மூட்டுகின்றன. 'அகத்தி னழகு முகத்திற் றெரியும்' என்பதுபோல நெஞ்சக் கடலுள் எழுந்த தூய்மையான எண்ணங்கள் முகத்தில் அழகுக் கதிர்களாக விளங்குகின்றன. களிப்பெனும் அலைகள் நெஞ்சகத்தில் புரண்டால் அது முகத்தில் புன்னகையாக மாறி ஒளி வீசுகிறது. நெஞ்சம் அமைதியாக இருந்ததெனில், அந்த அமைதி தேசு நிறைந்த முகத்தை உண்டாக்கும். நெஞ்சிற் கவலையுடையார்க்கு வதனம் ஒளி யிழந்து விளங்கும். ஒரு விடயத்தைக் கவலையுடன் ஆழ்ந்து சிந்திப்பவர்களுக்கு நெற்றியில் மடிப்புகள்—சுருக்கங்கள் தோன்றும். முகத்தைக் கண்ட மாத்திரத்தானே நெஞ்சி விருப்பதை உணர்வோர் பலர் உளர். அவர்கள் முகத்தின் அழகு விளக்கத்தையும், ஏனைய மாறுதல்களையும் கண்டு கூறுகின்றனர்.

பொதுவாக, இன் முகம் காட்டிப் பேசுவோனிடத்தில் யாவரும் இணங்கிப் பயிலுகிறார்கள். விருந்தினர்களும் தனது சுற்றத்தானது இன்முகத்தைக் கண்டே பசியாறுகிறார்கள்.

'ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமுதமாகும்'

என்பதே இதற்குச் சான்று.

பொதுமறையாம் திருக்குறளிலும் 'அறம்' யாது என வினவுவார்க்கு விடையாக

'முகத்தா னமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
இன் சொ லினதே யறம்.'

எனக் கூறிப்போந்தார்.

அன்றியும் இன்முகம் காட்டி உபசரியாவிடின் விருந்து துன்புறும் என்பது போதர

இனிய முகம்

'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.'

என்றும் கூறியுள்ளார்.

புன்னகை பூத்த முகத்தில் இனிமை உண்டாகுகின்றது. எனவே எத்தொழிலைச் செய்தாலும், யாரிடம் பேசினாலும் புன்னகையுடன் இருப்பின் எவரையும் நட்பின ராக்கலாம். முகத்து நகையும் அகத்துப் பகையும் கொண்டால் வதனத்தில் இனிமை தோன்றாது. ஆகையால் நெஞ்சத்தில் அமைதி, தூய்மை, முதலியன கொண்டு வதனத்தில் புன்னகை கொண்டு வாழ்வு நடாத்தினால் யாவரும் போற்றும் பெரும் புகழ் உண்டாகும்.

துன்பம் வந்த காலையிலும் மலையாமல் புன்னகையொளிர் வதனத்தோடிருக்கும் பான்மை பெற்றுவிட்டால் அவன் என்றும் இறக்கும் வரை அழகுடையனாய் இருப்பான். எப்படியேனும் நெஞ்சக் கவலை நீக்கி வதனத்திற் புன்னகையைப் புகுத்திப் புகுத்திப் பழகுதல் வேண்டும். அப் பழக்கம் நமது கண்ணோக்கமாக, அதனை விடாது பழகுங்கால் அதற் கெதிராம் துன்பங்கள் வந்த காலையின் அத் துன்பம் நெஞ்சத்துள் இடம் பெறாதவாறு எதிர்த்தல் வேண்டும். இப்பழக்கம் வன்மை பெறப் பெற எதற்கும் அஞ்சா நிலையும், என்றும் இனிய வதனமும் கொள்வோம் என்பதில் ஐயமில்லை.

அழகிய குணங்களும், அழகிய திருமேனியும் கொண்ட ராமபிரானது திருமுகம், கைகேயி காட்டிற் கேகப் பணித்த காலையில், அன்றலர்ந்த செந்தாமரைப் போதென விளங்கிற்றாம். அந்த இனிய முகத்தை நமது அகக் கண்ணால் நோக்குவம். அம் முகத்தைத் தோற்றுவித்த அழகிய—இனிய—நெஞ்சம் எவ்வளவு தூய்மை யானது! என்றும் சாந்தமும் தூய்மையும் கண்ட மாத்திரத்தே மனங் கவரும் தன்மையும் நிறைந்த வதனம், இன்றும் நமது பாரத மணித்திரு நாட்டில் விளங்குகிறது. அதுவே உலக

மெல்லாம் புகழ்படைத்த மலர்முகம். அம்முகத்தில் கவலைக் கஞ்சா மெய்வீரமும், யாவையும் அடக்கி அமைதியோடு நிலவும் சாந்தமும், எவரிடத்தும் இனிமை பூத்த புன்னகையும், அணிகளாய் விளங்கும். யாண்டுளது அது! சபர்மதி ஆசிரமத்திலே என்றும் குன்றாப் புகழுடன் பொலியும் காந்தியடிகள் முகமே அது. இவைகளைக் கொண்டு நமது பண்டைத் தமிழ் நாட்டில்,

'யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம்'

—மணிவாசகர்.

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் இசைவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை

—அப்பர்

என்று கூறியவர்கள் திருமுக மண்டலங்களை நமது அகக் கண்ணாற் பார்த்து மகிழ்வோமாக!

பார்வை கெடுவது எதனால்?

(வ. கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்கள் எழுதியது)

தற்போது நாம் படும் அல்லற்பாடுகள் பலவற்றையும் தனித் தனியே ஆராய்ந்து அவற்றை நீக்குத லென்பது எளிதான காரிய மல்ல. ஏனெனில் அந்நிய நாட்டாரது நாகரீகமும், நமது பழைய பழக்க வழக்கங்களும் முரண்படும் காலமாகு மிது! பாதி இந்தியராயும், பாதி அந்நிய நாட்டாராயும் விளங்க முயற்சி செய்வதால் அநேகர் அவதிப்படும் காலமாகு மிது!! நாட்டிற்கு ஏற்படும் தொல்லைகளைத் துலைக்க முன் வருவோர் தும்சஞ் செய்யப்படும் கால மாகு மிது!!! இப்படிக் கால மிருக்குந் தன்மையில் நாம் நமக்கு ஏற்படக் கூடிய எல்லாத் தீமைகளையும் தடுத்துக் கொள்ளுதல் முடியாது. எனினும் நமக்கு அதிக ஆபத்தைப்

பயக்கத்தக்க வற்றையேனும் நாம் அறிந்து அவற்றை அழித்து விடுதல் அவசியமாகிற தன்றோ ?

மனிதனது உருப்புக்களில் மிகவும் பிரதானமாகக் கருதப்படுவது எது? எந்த உருப்பின்றி ஒருவன் ஒன்றையும் சரிவர செய்ய முடியாது ? அது தான் நமது 'கண்.' கண்ணில்லையேல் எக் கருமந்தான் ஆகும் ? கண் பார்வை கெட்டவன் அதிகஐசுவரியம் படைத்திருந்தும்பயனென்ன? இவ்வித உண்மைகளை நாம் அறிந்திருந்தும் அறியாதாரே போன்று அனேக ஆரோக்கியமற்ற ஆகமங்களை ஆக்கிக் கொண்டே போவோமாயின் அந்தத்தில் ஆவதென்ன ? அனேகர் தாங்கள் பிறவிக் குருடராய்ப் பிறந்து விட்டதைக் குறித்து மட்டின்றி மனமுருகிக் கிடக்கும் போது சரியானபடி பார்க்கக் கூடிய சக்தி வாய்ந்த நாம் அச்சக்தியை அழிக்கத் தக்க அலுவல்களைச் செய்வது அறிவிலாச் செய்கை யாகாதோ ? பாபகரமான காரிய மாகாதோ? நாம் நன்றாய்ப் பார்த்துத் தீய விஷயங்களைப் போக்கி நற் கருமங்களை நாடுமாறு நல்ல கண்களை நமக்குக் கடவுள் கொடுத்திருக்கும் போது அவரது கட்டளைகளை அடியோடு மறுப்பதுபோல அக் கண் பார்வையைக் கண்டபடி கெட்ட விஷயங்களிற் செலுத்துதல் அநியாயமான கருமமென்று கூறுவதைத் தவிர வேறு என்னென்று சொல்ல முடியும் ?

இக்காலத்திய சிறுவர்கள்கூடச் சட்டம் பேசுவார்கள். "நான் என் கண்ணை எப்படி உபயோகித்தா லென்ன ?" என்று தங்களது கண்மீது தங்களுக்குள்ள உரிமையைப் பெரிதும் பாராட்டிக் கேள்வியும் கேட்பர். இத்தகையோர்—இப்படி விதண்டா வாதம் புரியும் இவர்கள் தங்கள் கண்களை எப்படி வேண்டுமானாலும் உபயோகித்துக் கொள்ளட்டும் ; ஆனால் கண் பார்வை கெடாமல் அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டு மென்பதை மட்டு மேனும் அவர்கள் மறுக்க முடியாது.

கண் பார்வை கெடுவதற்கு மார்க்கங்கள் பல வுள : குறைந்த வெளிச்சத்தில் படிப்பதும், படிக்கும் புத்தகத்தைக் கண்களுக்கு மிக அருகாமையில் வைத்து வாசிப்பதும், மிகச் சிறிய எழுத்துக்களைத் தமது கண்களை உருத்திப் படிப்பதும் கண் பார்வையைக் கண்டிப்பாய்க் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைத்துக் கடைசியில் அடியோடு இல்லாமல் செய்யக்

கூடியவை. ஆயினும் இப்பொழுது நாம் இவற்றைப்பற்றி அதிகமாகக் கூறுமல் முக்கியமான இரண்டு, கண் பார்வை கெடும் மார்க்கங்களைக் கூறி அதனைத் தொலைக்க வழி தேடுவோம். இவ்விரண்டு விதங்களையும் நாம் தொலைத்து விடுவோமாஞல் நம் பார்வை கெடுவதற்கு வேறு வழிகள் கிடையாது என்றுகூடக் கூறி விடலாம்.

சூரியாஸ்தமன மாகி இருள் மூடுவதற்கு முன்னுள்ள மங்கலான சந்தி வெளிச்சத்தில் எவ்வளவு பேர் படிக்கின்றனர்? முக்கியமாக அதிரஸம் ததும்பும் நாவல்களைக் கையிலெடுத்துப் படிப்போர் அவற்றைக் கீழே வைக்க மன மில்லாதவராய் அவ்வந்திப் பொழுதிலும் படிப்பதை நாம் பார்க்கின்றேம்; பரீட்சை நெருங்கி விட்டதென்றே, வகுப்பில் முதல்வஞய் விளங்க வேண்டுமென்றே, அல்லது பெற்றேரின் கட்டளைக் குட்பட்டோ மாணவர் பலர் மங்கலான அவ் வெளிச்சத்தில் தங்கள் கண்களால் புஸ்தகத்தை உருத்திப் பார்த்துப் படிப்பது நமக்குக் தெரிந்த விஷயம். ஆ! கண் பார்வை கெடக்கூடிய மார்க்கங்களில் தலைமை பெற்று விளங்குவது இது என்பதை நாம் அறியோம் போலும்; அங்ஙனம் ஆகும் என்பதை அறிந்திருந்தும் அப்படிச் செய்வோமாயின் அது ஒரு பித்தனின் செய்கை போலாகு மென்பதில் தடையுண்டோ?

இரண்டாவதாகப் பார்வை கெடக்கூடிய மார்க்கம் பலதுர் ஆராரோக்கியமான வழிகளைச் சேர்ந்ததெனினும் ஒரே விதமாகக் குறிப்பிடக் கூடியது. அதாவது இரவில் தூங்காமல் கண் விழித்திருத்தல் என்பதாம். சத்காரியங்களின் நிமித்தம் இந் நாட்களில் கண் விழித்திருப்போர் மிகச் சிலரே; ஆகவே அத் தகையோரை விட்டு ஏனையோரைப் பற்றி மட்டும் பேசுவோம். நாடகஞ் செல்வோரும், சீட்டாடுவோரும், மைவிழியார் மனை போவோரும், 'பயாஸ்கோப்' என்ற கண்காட்சிச் சாலைக்குச் செல்வோரும் இரவு முழுதும் கண் விழிக்கப் பின் வாங்குவதில்லை. சத்காரியமென்ருல் 'சடக்'கென பின் வாங்கும் புண்ணியவான்கள் (!) கேளிக்கை யென்ருல் 'நான்' 'நீ' என்று முன் வந்து தங்களையும் கெடுத்துக் கொள்ளுத லேனே? பகலெல்லாம் பல வேலைகளி லீடுபட்டுத் தளர்வடைந்து போயிருக்கும் நமது சரீரம் இரவில் அமைதியாக இளைப்பாறுதல் அவசிய

மாயிருக்க அந்த இரவையும் ஆரோக்கியமற்ற அற்பவழிகளிற் செலவு செய்திடின் பிறகு விளைவதென்ன ? ஒரு மனிதன் நல்ல காரியங்களைச் செய்யட்டும்; அல்லது தீவினைகளையே புரிந்து வரட்டும். எதற்கும் அவனுக்கு அடிப் படையாக இருந்து வரவேண்டியது அவனது தேகமே யன்ருே? 'சுவ ரிருந்தாலன்ருே சித்திரம் எழுதல் முடியும்?' ஆகவே இரவில் கண் விழித்துக் காலத்தைக் கழிப்பதால் நமது கண் மட்டுமல்ல, நமது தேகமே அடியோடு பாழடைந்து போகிறது. இதில் மற்ருேர் விநோதத்தைப் பாருங்கள் — சிற்சில சமயங்களில் நம்மையும் அறியாமல் இரவில் தூக்கம் வந்து விடும்; அங்ஙனம் தூக்கம் வருவதைத் தடுத்துப் புது உணர்ச்சியை உடம்பில் புகுத்து நிமித்தம் சூடான பானங்களை நம்மில் எவ்வளவு பேர் பருகுகின்றனர்? ஆ! அப்போது மட்டும் ஒரு வித ஊக்கத்தை உடம்பில் உண்டாக்கக் கூடிய இவ்வகைப் பானங்கள் பின்னர் நமக்கு அடியோடு நமனுகும் என்பதை நம்மனேர் அறியவில்லை. கண் பார்வை யின்றிப் பலர் கதறும் போது நாம் நமது கண்களைக் கெடுத்துக் கொள்ளுவதும், சரியான தூக்கம் வாராததைப் பற்றிப் பலர் வருந்தும்போது நாம் நமது தூக்கத்தைத் தொலைக்க வழி தேடுவதும் வெகு நன்ருயிருக்கின்றன. நாம் இதைப் பற்றி என்ன செய்வது? ஆச்சரியப் படுவதா? வருத்தப் படுவதா?

இரவில் கண் விழிப்பதால் கண் பார்வை குறையத் தொடங்கு மெனினும், இரவில் கண் விழித்து 'பயாஸ்கோப்' படக் காட்சிகளைக் காண்பதால் தான் கண் அதிகமாகக் கெடும். கடைசியில் கண்களுக்குக் கண்ணுடி தரிக்கச் செய்வதும் இக் கண் காட்சிச்சாலை செல்வதே யென்று பல அறிஞர் கூறுகின்றனர்.

இறுதியாக, இதுகாறும் கூறியவற்ருல், தற்காலத்திய மாணவரும் ஏனேயோரும் சந்திப் பொழுதில் படிப்பதால் கண்களுக்குக் கேடுண்டாகிறது என்பதும், அவ்வேளையில் எங்கும் நிறைந்த எம்பெருமானை ஏற்றித் தொழுதல் 'இக பரலோக' சாதகமாகு மென்பதும், இரவு நேரங்களில் கண் விழித்திருத்தல் அதிக ஆபத்தைப் பயக்கத் தக்கதென் பதும், அதிலும் 'பயாஸ்கோப்' கண் காட்சிக் சாலைகளுக்குச் செல்வதால்தான் அளவற்ற கெடுதி எற்படுகிறதென்

பதும் ஒருவாறு விளக்கப்பட்டன. ஆதலின், இனியேனும் அனைவரும் தங்கள் மனப் போக்கைத் திருப்பி ஆரோக்கிய அனுகூல மார்க்கங்களை அனுட்டித்து நற் பயனடைவார்களாக.

[கண்ணைக் கெடுப்பதில் மண்ணெண்ணெய் விளக்கே தலைமை வகித்திருக்கிறது.—ல-பர்.]

செல்வ மகிமை

(பம்பாய் நா. தி. கோபாலய்யங்கார் அவர்கள் எழுதியது.)

ஆறறிவு பெற்றோ ரனைவரும் அடையும் அரிய செல்வங்கள் பல வுளவென அறியாதோர் அரிதே யாவர். அன்னோரின் வாழ்நாட்களில் சுக துக்கங்கள் காலச் சக்கரங்கள் போலச் சுழன்று நிற்பதுவும் உண்மையே யாகும். கஷ்டங்களை ஒருவன் அனுபவிக்க நேரிடுங் காலத்துள் அவ்வப்பொழுது கிஞ்சிற்று எமம் கிடைத்திடாமற் போகாது. அது போலவே சுகத்திலாழ்ந்த சிறு பான்மையோர் அனைவரும் ஆதி முதல் அந்தம் வரையில் சுகத்தை மாத்திரம் செவ்வனே கோரியபடி அனுபவிக்க ஈசனு மளிப்பதில்லை. அவர்களுக்குக் குடிக்கக் கூழும் உடுக்க ஆடையும் தரிக்க ஆபரணங்களும் குவியல் குவியல்களாக விருப்பினும் மக்கட்பேறற்ற விடத்து மகிழ்ச்சி யற்றுப் போவதும் சாதாரணமே. மற்றோரிடத்தோ கண்ணன் கருணையால் புத்திர பாக்கியம் சலிக்கப்பெற்று அன்னோர் அன்றாடன்று கொள்ள வகை யறியாது வறுமைப் பிணியால் வருந்துவதும் நண்பர்கள் கவனித்திருப்பர்.

செல்வம்-சம்பத்து-ஐசுவரியம்-நிலைபொருளல்ல. நீர்மேற் குமிழியெனத் தோன்றி மறையும் தெய்வத் திருவருளே யாகும். இது மானிடர் கோரும் மகிழ்ச்சிகளையும் எளிதில் அளித்திட உதவியாக வுள்ளது. உண்மையில் இதற்கு நீரைப் போல சுய குணம் இன்னதென எளிதில் கூற எவராலு மியலாது. கொள்ளும் பாத்திரத்தின் குணத்தையே நாம் கண்டுணர வேண்டும். ஒருவன் நெற்றி நீர் நிலத்தில் வடிய அரும்பாடுபட்டு உண்ணாது உடுக்காது ஏற்றவிடத்துத் தான

தருமமியற்றாது பணப்பேயென வருந்திப் பின்னர் தேனீக்கள் கதியாக மண்ணுடன் மண்ணைக் கலந்திடுவதே யன்றி கொண்டதன் பலனை யனுபவிக்க விரும்பான். அத்தகைய அறிவிலிகள் தேடி வைத்த பொருளை எதிர்பாராது அடைந்தவரில் சிலர் "தான் தேடாத பணத்திற்கு மாற்று மில்லை உறையு மில்லை" என்பது போலும், நயவஞ்சக நண்பர் நால்வரை எளிதிலடைந்து 'கண்டதே காமம் கொண்டதே கோல'மெனக் கூத்துக்கும் இட்டு, குடியிலும் வேறு இதர துஷ்கிருத்தியங்களிலும் மூழ்கிப் பணத்தை வாரியிறைத்து பக்கிரியாவதை நாம் வெகு இடங்களிற் கண்டிருக்கிறோம். பணத்தின் மகிமை யறியாத பாமரர் பலர் திடீரென்று கிடைத்த பொருளைக் காக்க வகை யறியாது பித்துப்பிடித்துலவுவதுவும் உண்மை. சிலருக்கு ஒரு வித துர்மதி தோன்றிக் கட்குடித்த குரங்கென மான மட்டு மரியாதை யாவற்றையுந் துறந்து மனம் போனபடி மகிழ்ச்சி யுற்றுக் காலந் தள்ளுவதும் அரைக்கணமே யாகும். மறுபோழ்து கைப்பணம் கரைந்து செல்ல உடுக்கை யிழந்த பூசாரி போல் உடைக்கும் உணவிற்கும் ஊரூராய் அலைந்து மண்ணில் மறையுமட்டும் அல்லோல கல்லோல மென்ன அடுத்தடுத்துறும் அவதிகட்கு ஆளாகி மாய்வதுவும் உலக விந்தை தானே? மேற்கூறிய துன்பங்கள் யாவும் தன லக்ஷ்மி துராதிர்ஷ்ட அதர்மங்களடைந்ததன் பயனாக ஏற்படுங் கூற்றுகளென நாம் சுட்டிக் காட்டினோம். இது தனவந்தர்கள்—கண்ணிய பிரபுக்கள் முதலானோரின் சார்பைச் சேராத வெகு சிலரின் கதி யாகும்.

ஆக, பெரும்பாலும் ஐசுவரியம் பூர்வ ஜன்ம பலாபலன்களைப் பெற்றோரிடம் தோன்றுவது நூதன மல்ல. பணம் மண்ணில் மறைந்த பிணத்தை யெழுப்பும் வல்லமையைப் பெற்றதென்று சிலர் கூறுவர். எனினும் செல்வர்க்கழகு தமது இன்றியமையாதவைகளை அடைந்த பின்னர் தமது செழுங்கிளையை அல்லல் அவமதிப்பு வறுமைப் பிணி முதலியவற்றினின்று நீக்க ஏற்ற முயற்சிகள் செய்தல் இன்றியமையாதது. பின்னரே மற்றத் தான தருமங்கள் தத்தமது சக்திக்கும் மனச் சாக்ஷிக்கும் மாறுபாடின்றி இயற்றி புகழுடம் படைய முன் வரவேண்டும். அநாதை, கூன், குருடு, செவிடு முதலானோரின் கஷ்டங்களைத் தம்முடைய தெனப்

பாவித்து எற்றவா றுதவ வேண்டும். நோயாளி, பெண் பாலார் முதலியோரின் இக்கட்டுகளை யெதிர் நோக்கித் தயாள குணத்துடன் பராபரித்து வருவது பெருந்தன்மை யாகும். ஏழை, வேறு இதர குலத்தவர் போன்ற அநா தைகளுக்கும் சுகாதாரம், கல்வி யெனப் பல துறைகளிலும் உதவி செய்து முன்னுக்கு கொண்டுவாத் தமது வருவாய் தனைச் செலவிடுபவர் பேரும் புகழும் தமது நகரத்தில் பெறுவதன்றி தமது தாய் நாட்டிற்கே பெரியதொரு நலத்தை செய்தவ ராவர். தான் கொண்ட தனத்தை வாரி யிரைத்து வருவாயின்றி வறுமைப் பிணியால் வருந்த எவரும் கூறவில்லை. 'தனக்கு மிஞ்சியே தருமம்' என்பதை யிங்குச் சுட்டிக் காட்டுகிறோம். பெரிதும் தான தரும மியற்ற முன் வரும் பிரபுக்கள் தேயத்தில் எளியோரைக் காக்கும் கைத் தொழிலையும் நாட்டின் மேன்மையை யுண்டாக்கும் தேசீயக் கல்வி முதலிய அபிவிருத்திகளைச் செய்வாராயின் நமது நாடு பொன்னு டென்னும் புகழ் நாடாகும்.

நீதி பஞ்சகம்

(ஸ்ரீமான் ***S- K.*** கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் எழுதியது)

1. சமத்துவம்

'சமத்துவம்' என்றால் எல்லாவற்றி னிடத்தும் சம மாக எண்ணி, சமமாக நடக்கவேண்டு மெனப் பொருள் படும். ஆகவே, நாம் நமது சகோதரர்களாகிய மனிதர் களைச் சமமாகக்கொண்டு, அவர்களிடத்தி சமத்துவமாக நடந்துகொள்ளல் வேண்டு மென வலியுறுத்துகின்றனம்.

2. சகோதரத்வம்

இந்தியாவில் பிறந்த நாம் அனைவரும் இந்திய மக் களே யாவோம். ஆகவே இந்திய மக்களாகிய நாம் சகோ தரக ளென்ற எண்ணத்துடன் வாழ்தலே மிகச் சிறந்த வழியை யுடைய தென்பதை வற்புறுத்துகின்றனம்.

3. சுதந்திரம்

நாம் ஒவ்வொருவரும் சுதந்திர புருஷர்களாக வாழ வேண்டுமானால், நமக்குள் 'ஒற்றுமை' அவசியம் வேண்டற் பாலது. ஒன்றுபட்டால் முடியாத காரியம் ஒன்றுண்டோ? "ஒன்று பட்டாலுண்டு வாழ்வு—நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு" என்ற பாரதியார் திருவாக்கைக் கடைப்பிடித் தொழுகல் வேண்டியது ஒவ்வொருவரின் முக்கியக் கடமை.

4. ஜீவகாருண்யம்

'ஜீவகாருண்யம்' என்பது கடவுளாற்சிருஷ்டிக்கப்பட்ட ஜீவான்மாக்க ளிடத்து ஒவ்வொருவரும் இரக்க முடைய வர்களா யிருத்தல் வேண்டும். இதை உணர ஆற்ற லில்லாத பலர் தங்கள் ஊனைப் பெருக்க வேண்டி ஆயிரம் ஆயிரமாகிய ஜீவர்களைக் கொன்று, அவைகளைப் புசிக்கின் றார்கள். அந்தோ! இக்கொடிய கொலைத் தொழில் எவருக்கும் கூடாதென்பதை நாம் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகின்றனம்.

5. மதுவிலக்கல்

மனிதர்களின் மனத்தையும், புத்தியையும் கெடுத்துப் பஞ்சமா பாதகத்திற்கு ஆளாக்கும் கட்குடி முதலிய பானங்களை அறவே விட்டொழிக்குமாறு பன் முறையும் மன்றாடிக் கூறுகின்றனம்.

பொருளழகு

(ஸ்ரீமான் ***S. K.*** கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் எழுதியது)

முத்தொழிற்கும் முதல்வ னாகிய பரம்பொருளின் பெருங்கருணையால் இப்பிறப்பில் பொருளைப் பெற்றோர் நல்வழியிற் செலவுசெய்து அப்பொருளை அழகுபடுத்தல் வேண்டும்.

"கைப்பொருள் பெற்ற ஞான்றே கடவுளா லயத்திற் கீந்து
மெய்ப்படு புராண நூல்கள் விருப்பொடு கேட்டு வந்து
வைப்பென விரப்போர்க் கீந்து வருபவ ருளரேற் கூற்ற
மெய்ப்புயத் தண்டந் தப்பி முன்னவ னின் பத்தாழ் வார்"

என் றுரைக்கப்பட்ட நீதி வாக்கியத்தை யறிந்து அதன்படி ஒழுகல் வேண்டும்.

பொருளுடையோர் திருப்பணி முதலிய கைங்கரியத் திற்கும், உண்மையாகிய ஞான சாத்திரங்களை விருத்தி செய்வதற்கும், சிவனடியார்கட்கும், மற்றும் ஏழை ஜனங் கட்கும், உதவி புரிந்து அவர்களை ஆதரித்து வந்தால், இம் மையிற் புகழும், மறுமையிற் சுவர்க்கமும் (மோக்ஷம்) பெற் றுய்வர்.

இப்படிச்செய்வதுதான்; நல்லற மாகும், நல் வழி யாகும்; நல்லழ காகும்; நற்றுணை யாகும்; நற்புக ழாகும்; நாடும் விளங்கும்; நமனும் அஞ்சுவன்; நற்பதவியும் கிடைக்கும்.

இங்ஙனம், பொருளை அழகு படுத்துவதற்கு எத் துணையோ நல்ல வழிக ளிருக்க, அவற்றைக் கவனியாது, நீதியறியாது, நிலை தெரியாது, வீண் ஆடம்பரங்களிற் பொருளைச் செலவுசெய்து படாடோபமான பட்டங்களை யும், புகழையும் பெறுவதுதான் தான்பெற்ற பொருளுக்கு அழகென் றெண்ணி "கொள்ளைக்கும், கொலைக்கும், கள் ளுக்கும், சூதுக்கும், வாதுக்கும், தாசிக்கும்" செலவுசெய்து 'வறுமை' யடைந்து பூனைபோல் விழித்திருக்கும் பணக் கார ஏழைகளை யார்தான் மதிப்பர், உபசரிப்பர்? இப்படித் தாய துன் மார்க்க விஷயங்களிற் செலவு செய்யும் பொரு ளுடையோருக்குப் பொருளுள்ள மட்டும் புகழ்ச்சிதான். பொருளழிந்த பின் இகழ்ச்சிதான்.

ஆதலின், சன்மார்க்க விஷயங்களில் பொருளைச் செலவுசெய்து, வறுமைக் குட்பட்ட போதிலும், அவர்கள் என்றும் பொருளுடையவராகவே விளங்குவர். யாவரும் அவர்களை இடைவிடாது உபசரிப்பர். என்றும் மகிழ்ச்சி, புகழ்ச்சி அவர்கள் பால் தாண்டவ மாடா நிற்கும்.

இனியேனும், பொருளுடையோர் எவ்வழியில் செலவு செய்தல் நலமென்பதைக் கவனிப்பார்களாக.

ரகுமாரன்

(191-ம் பக்கத் தொடர்ச்சி.)

அத்தியாயம் 3.

சாயம் வெளிப்படல்

நாட்கள் பல கழிந்தன. ஒரு நாள் சங்கமாபுர மன்னன் சற்குண மகாராஜன் ஏராளமான பொருள்களுடன் ஜெயவந்திபுரத்திற்கு வந்து, ஜகந்நாத பூபதியைக் கண்டு வணங்கி, "அரசே! நற்குண நற்செய்கைகள் நிறைந்த உமது புத்திரனாகிய ரகுமாரன் எனக்குச் செய்த உதவி கொஞ்சமல்ல. விரோதியின் கையினின்றும் ராஜ்யத்தைக் காப்பாற்றினன். பஞ்சத்தால் இறக்கப்போகும் ஜனங்களையும் ரொட்டித் துண்டின் உதவியினுற் காப்பாற்றினன். அதற்காக இந்த சாமான்களை நான் அவனுக்குப் பரிசளிக்கிறேன்" என்று விண்ணப்பம் செய்துகொண்டான்.

இவைகளையெல்லாங் கேட்ட ஜகநாத பூபதி தன்னை ரகுமாரன் கொல்லவேண்டுமென்று நினைக்கவில்லையென்று நினைந்து மிகவும் வருந்தி "ஆஹா! என்ன காரியஞ் செய்தேன். இப்பொழுது அவனிருந்தால் என் மனது எவ்வாறு களிக்கும்! எதற்காக நான் அவனைக் கொல்ல உத்தரவு கொடுத்தேன்" என புலம்பினன்.

வேட்டைக்காரன் காதில் இந்த இளகிய வார்த்தைகள் எட்ட அவன் அரசே! நான் அவனைக் கொல்லவில்லை. இப்பொழுது அவன் எங்கேனும் உயிருடனிருப்பான். நாங்கள் ஆடைகளை மாற்றிக்கொண்டு அதனுல் அவன் இறந்ததாக உம்மை நம்பும்படி செய்தேன். அவனைக் கொல்லாமல் விட்டதுபற்றி எனக்கும் மிகவும் சந்தோஷமே!"

இதைக் கேட்டதும் ஜகந்நாத பூபதி மிகுந்த ஆச்சரியங் கொண்டார். சந்தோஷம் அவரை அறியாமலே வந்துவிட்டது. பிறகு, ரகுமாரன் திரும்பியும் வந்து அவனது தகப்பனரைப் பார்த்தால் அவன் மன்னிக்கப்படுவான் என்று பட்டண முழுவதும் பறையறைவித்தார்.

இங்கு இவ்வாருக, அழகிற் சிறந்த கலாவதி ரகுமாரன் வரவை எதிர்பார்த்தவளாயிருந்தாள். அவள் தனது

அரண்மனைக்கு தங்கத்தினால் பாதையொன்று போடுவித்து தனது காவலாட்களை வரவழைத்து, "எவராவது குதிரைமேற் சவாரி செய்துகொண்டு, இந்த சொர்ணப் பாதையின் வழியாய் வந்தால் அவரை உள்ளே விடுங்கள். அவர்தான் என்னைக் காப்பாற்றிய எனது ஆசை நாயகர். என்னைக் கலியாணஞ் செய்துகொண்டு இந்த மாளிகையின் அதிபதியாய் வரப்போகிறவர். அவரை யாதொரு தடையுமில்லாமல் உள்ளே விடுங்கள். மற்றவரை விடாதேயுங்கள். யாரேனும் அப்பாதை வழியாய் வராமற் போனால் அவர்களை வெளியே நிறுத்துங்கள்," என்று உத்தரவிட்டுச் சென்றாள்.

வருடமும் முடிந்தது. முதலாவதாகக் குலபாலன் வந்தான். தன் தம்பிக்கு முன்னரே போய், கலாவதியினிடம் தான்தான் அவளைக் காப்பாற்றியவனென்றும், தன்னைத் தான் மணந்துகொள்ள வேண்டுமென்றும் சொல்லுவதாகத் தீர்மானித்துக்கொண்டான். அரண்மனையின் அருகே வந்ததும், பிரகாசிக்கின்ற தங்கப்பாதையைக் கண்டு, தன் குதிரையை நிறுத்தி, "இந்த அழகான சுவர்ணப் பாதையின்மேல் சவாரிசெய்து இதைக் கெடுத்தால் யாது பயன்? இதன்மேல் போக யாருக்குத் தான் மனம் வரும்" என்று நினைத்தவனாய், தங்கப்பாதையின் வழியாய்ப் போகாமல், வேறு வழியாய்ச் சென்றான். அரண்மனைவாயிலை அடைந்ததும் வாயிற் காப்போர்கள் அவனை நிறுத்தி, "அரசகுமாரி உன்னை அறியமாட்டாள். நீ உள்ளே போகக் கூடாது. வந்தவழியைப் பார்த்துக்கொண்டே வெளியே செல்" என்று சொன்னார்கள். பிறகு அவன் வந்த வழியைப் பார்த்துக்கொண்டு செல்ல லாயினன்.

இரண்டாவதாக ஸ்ரீபாலன் கலாவதியை எப்படியாவது அடையவேண்டுமென்கிற நினைப்பால் அங்கே வந்தான். அவனும் தங்கப் பாதையை யடைந்து, அதை கொஞ்சநேரம் உற்றுப் பார்த்துவிட்டு, "ஆஹா! இது எவ்வளவு அழகா யிருக்கிறது. இந்தக் கலாவதி யென்ன லக்ஷ்மி தேவியோ! நான் இந்தப் பாதையின் மேலே போய் இதைக் கெடுக்கமாட்டேன்" என்று நினைத்து வேறு பாதை வழியாய் அரண்மனை வாயிலை அடைந்தான். தன்னை வாயிற் காப்போர்கள் உள்ளே விடாதது பற்றி மிகுந்த

கோபங்கொண்டான். வாயில்காப்போர்கள் அவனையும் தங்கள் அரசி அறியாளென்று கூறி யனுப்பிவிட்டார்கள்.

கடைசியாகக் காட்டிலிருந்து ரகுமாரன் கலாவதியைக் கலியாணம் செய்துகொள்ள வந்தான். அவன் வருத்தமாயும் சந்தோஷமாயும் இருவேஷமாகக் காணப்பட்டான். தான் மிகவும் அருமையாய் நேசித்து வந்த தனது தகப்பனார், தான் அவருக்கு தீங்கு செய்ததாக நினைத்துத் தன்னைக் கொல்லும்படி கட்டளை யிட்டதைப்பற்றி நினைக்க அவனுக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது. ஆனால் சீக்கிரம் தான் கலாவதியை மணந்துகொள்ளப் போவதை பற்றி நினைக்க அவனுக்கு ஒரு வித சந்தோஷத்தைக் கொடுத்தது. பிறகு தனக்கு வருத்தங்களே வாரது என்று தீர்மானித்தான். ஆனால் அவன் தங்கமாளிகைக்கு வர வேண்டுமென்று நினைத்ததாக எண்ணினானே தவிர, தான் அங்கே போவது அவனுக்குத் தெரியவில்லை. அவன் தங்கப் பாதையைக் கவனிக்காமல், அதன் வழியாய் நேராக அரண்மனை வாயிலை யடைந்தான். வாயிலில் கலாவதி கையில் பூமாலையுடன் நின்றுகொண்டிருந்தாள். ரகுமாரனைக் கண்டதும் மிகுந்த மனமகிழ்ச்சியுடன் வரவேற்று, "காதல! உமது தகப்பனார் உம்மை மன்னித்து விட்டார். உம்மைப் பார்க்க விரும்புகிறார். எதற்காக உம்மைக் கொல்லும்படி கட்டளையிட்டார்" என்று புன்முறுவலுடன் உரைத்தாள். ரகுமாரனும் ஜெவந்திபுரத்தில் நடந்தவற்றை ஆதியோடந்தமாய் உரைத்தான்.

தன்னைத் தன் தகப்பனார் மன்னித்துவிட்டாரென்பதைக் கேட்டு சந்தோஷங்கொண்டு அவரைப் பார்க்க விரும்பினான். கலியாண மாவதற்குள் கலாவதியுடன் கூட ஜெவந்திபுரத்திற்குப் பிரயாணமானான்.

வெகுகாலம் தன்னைவிட்டுப் பிரிந்திருந்த ரகுமாரனைக் கண்ட அவனது தகப்பனார் சந்தோஷத்திற் களவுண்டோ! ரகுமாரன் நடந்த உண்மைகளையெல்லாம் தகப்பனாருக்குரைத்தான். ஜீவநீர் கொண்டுவந்ததையும், கலாவதியைக் காப்பாற்றினதும், தமயன்களை ரக்ஷித்ததையும், தன்னிடமிருந்து ஜீவநீர் களவாடப்பட்டதையும், தன்னை யேமாற்றியதையும் விடாம லுரைத்தான்.

இதைக் கேட்டவுடன் ஜகந்நாத பூபதி கோபங் கொண்டு, குலபாலனையும் ஸ்ரீபாலனையும் தண்டிக்க நினைத்தார். தாங்கள் திரும்பியும் போனால் தங்களை தகப்பனார் ஒன்றும் செய்யாம லிருக்கமாட்டாரென்றும் தங்கள் சாயம் வெளிப்பட்டு விட்டதென்றும் நினைத்துத் திரும்பி வாராம லேயே சென்றுவிட்டார்கள் குலபாலனும் ஸ்ரீபாலனும்.

பிறகு ஜகந்நாத பூபதி ஐம்பத்தைந்து தேசத்தரசர்களுக்கும் மணவோலை யனுப்பினார். கலியாணம் வெகு விமரிசையாய் நடந்தேறியது. கலியாணத்திற்குப் பொன்மலைக் குள்ளனும் வந்திருந்தான்.

ரகுமாரனும் கலாவதியும் மங்கள ஸ்நானம்செய்து மணவறையி லுட்கார்ந்து கொண்டார்கள். வேதியர்கள் முகூர்த்தச் சடங்குகள் நடத்தி நல்லமுகூர்த்தத்தில் விவாஹமும் நடந்தேறியது. ரகுமாரனும் கலாவதியும் இன்பமாய்த் தங்கமாளிகையிலேயே வசித்து வந்தார்கள். ஜகந்நாத பூபதிக்குப் பிறகு ரகுமாரனே கலாவதியின் தேசத்திற்கும் ஜெவந்தீபுரத்திற்கும் அரசனாகி இனிதாகவே செங்கோல் செலுத்திவர லாயினன்.

"பொங்கும் மங்களம் எங்கும் தங்குக"

முற்றிற்று

நரி விருத்தக் கதைகள்

(குழப்பலூர். மே. சக்கரவர்த்தி அவர்கள் எழுதியது.)

(169-ம் பக்கத் தொடர்ச்சி.)

கதை—5.

ஜயசேன னென்னும் மன்னன் அருகனாலயங் கட்டத் தன் பரிசனங்களைக் கொண்டு செங்கற்களைச் சேகரஞ் செய்து வந்தான். அது பொழுது அம்மன்னனது நகரத்தில் வசித்து வந்த லோலுபன் என்னும் பிட்டு வாணிக னொருவன், அரசனுடைய பரிஜனங்களுள் ஒருவனைச் சிநேகித்து அவனுக்கு ஆகாராதி முதலியவைகளைக் கொடுத்து, தன் கிருக உப

யோகத்தின் பொருட்டுச் சில செங்கற்களை அவனிடம் இரக சியமாகப் பெற்று வந்தான். அவைகளுள்ளே ஒரு செங் கல்லில் பொற்கட்டி காணப்பட்டது. அதனைக் கண்டதும் அவன் புதையல் கிடைக்கப்பெற்ற வறுமையாளன் போல் ஆனந்தங் கொண்டு, இதுபோலவே எல்லாக் கற்களிலும் சுவர்ணத் துண்டம் பொதிந்துகிடக்குமென் றெண்ணி, செங் கற்கள் கொடுத்து வந்தவனுக்குப் பல வித ஆகாராதி சன் மான தானங்களைக் கொடுத்து ஒரு நாளும் தவறாமல் அதிக மான செங்கற்கள் பெற்றுத் தன்னில்லத்தில் பத்திரப்படுத்தி வந்தான்.

இங்ஙனம் பிட்டு வாணிகன் செங்கற்களைத் தவறாமல் சேகரஞ் செய்து வருகின்ற காலத்தே, ஒரு நாள் வேறு கிராமத்திலிருந்த தன் புத்திரியைக் காணவேண்டிய அவ சரம் அவனுக்கு வந்தது. அப்பொழுது செங்கற்கள் வாங்கு வது தடைப்படக் கூடா தென்று பேராசை கொண்டு அவன் தன் புத்திரனை யழைத்து, அவனிடம், 'வழக்கமாய் நமக் குச் செங்கற்கள் கொடுத்து வருபவனுக்கு ஆகாராதி வகை களைக் கொடுத்து அவன் இரகசியமாயக் கொடுக்கும் கற்களை வாங்கிப் பத்திரப்படுத்தி வை; இது ஒரு நாளும் தடைப்படு தல் கூடாது. நான் நின் சகோதரி பதிக்குச் சென்று வரு கின்றேன்' என்று கூறித் தன் மகள் வதியும் கிராமஞ் சென் றான்.

வாணிகன் புத்திரன் அவன் சொற்படி செங்கற்களை வாங்கி வைக்காது உபேக்ஷையா யிருந்து விட்டான். வெளி யூர் சென்ற லோலுபன் மீண்டு தன் மனை யடைந்து செங் கற்களின் தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தனன். பார்த்த லும் தான் பெற்று வந்ததற்கு மேல் ஒன்றும் காணாமையால் புத்திரன் இக்காரியத்தில் உபேக்ஷையா யிருந்தமைக்கு முனிந்து பேராசை கொண்ட வாணிகன் ஒரு பெரிய தண் டத்தை யெடுத்து அவன் மத்தகத்தில் அடித்ததோடு, கற் கள் வாங்குந் தொழிலை விட்டுச் சென்ற தன் கால்களையும் புடைத்தனன்.

இது செய்தி ஊரெங்கும் பரவி அரசனுக்கும் எட்டிற்று. அரசன் பேராசை வாய்ப்பட்டு அடாத காரியஞ் செய்த வாணிகனைத் தண்டிக்குமாறு தன் பரிசனங்கட்கு ஆஞ்ஞா பித்தனன். அவர்கள் அரசன் கட்டளைப்படியே அவனைத்

சித்திரத் தண்டம் புரிந்தனர். முடிவில் வாணிகன் மரண மடைந்து கிரியாய்ப் பிறந்தனன்.

இக்கதையினுல் நாம் அறிவது, பேராசை யென்னும் பேய்வாய்ப் பட்டவர்கள் இவ்வாணிகன் போல இம்மையில் துன்பமும், மறுமையில் தீக்கதியும் பெறுவ ரென்பதே.

கதை—6.

தான்யபுரம் என்னும் நகரத்தில் வதிந்த குபேரதத்த சிரேஷ்டிக்கும் அவன் மனைவி சுதத்தைக்கும், நாகதந்த னென்னும் புத்திரன் ஒருவன் இருந்தான். அவன் தன் பிதா செய்து வந்த இரத்தின வியாபாரத்தையே அவனும் செய்து வந்தான். அத்தொழிலில் அவன் பொருளீட்ட வேண்டுமென்று பேராசை கொண்டு தன் கடையில் தன்னை யோக்கிய னென்று நம்பி இரத்தினங்கள் வாங்கும் வாடிக் கைக்காரர்களை யெல்லாம் ஏமாற்றி வந்தான். இது காலத்தே அவன் தங்கைக்கு விவாகம் கூடியது. அதற்காக நாகதந் தன் அன்னை அவன் கடையை யடைந்து நல்ல ரத்தினங் களைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு, அதற் கேற்பட்ட உண்மையான மதிப்பை மாத்திரம் கொடுத்தனள். நாக தந்தன் இவ்விரத்தினங்களின் விக்கிரயத்தில் விசேஷ லாபம் வைத்து வஞ்சிக்க இடமில்லாமற் போனதற்கு மிகவும் வருந்தி அதே கவலையனுய் நோய்ப்பட்டு இறந்து குரங்காய் ஜனித்தனன்.

இதனுல் பொருள் நசையும் பேராசையுங் கொண்டோர் இந் நாகதந்தன் அடைந்த கதியே அடைவரென்பது போதருகின்றது.

கதை—7.

பரதகண்டத்திலே பத்ம ஷண்டம் என்னும் பதியிலே சுதத்தன் என்னும் வைசியனுக்கும் அவன் பத்தினி சுமித்தி ரைக்கும் பத்திரமித்திரன் என்னும் புத்திரன் தோன்றி யௌவனனுகி வைசியகுல கன்னிகைகளை மணந்து இன்பந் துய்த்து வந்தான்.

அவன் இங்ஙனம் இன்பம் அனுபவித்து வருகின்ற காலத்தே தீபாந்தரஞ் சென்று பொருளீட்டக் கருதி நாவா

யில் பல சாக்குகளேற்றிக் கடல் கடந்து இரத்தின தீப மென்னும் தீவை யடைந்து சாக்குகளை நல்ல லாப விலைக்கு விற்று அவைகட்குக் குணமான இரத்தினங்களை வாங்கிக் கொண்டு தனது பதிக்குத் திரும்பினான். திரும்புகையில் சிம்மபுரம் என்னும் நகரத்தைச் சந்தித்தான். அந்நகரம் சிம்மசேனனென்னும் அரசனது அரசாட்சிக்கு உட்பட்டது. அவ்வரசனுக்குப் பூமகள் எழிலும், நாமகள் புத்தியும் வாய்ந்த இராமதத்தா தேவி யென்பவள் பட்ட மகிஷி யாயும், சத்திய கோஷனென்னும் காரணப் பெயர் பூண்ட ஸ்ரீபூதி யென்னும் வேதியன் அமைச்சனாகவு மிருந்தார்கள். இவர்கள் கூட்டுறவால் அரசன் இராச்சியத்தை அரச நீதி வழுவாது அரசு புரிவதனாலே அவன் வதியும் தலை நகரமாகிய சிம்ம புரத்திலே பல தேசத்தாரும் குடி வந்து சௌக்கிய மனுபவித்து வந்தார்கள். குடிகள் பெருகி வியாபாரஞ் சிறந்து விளங்கும் இந்நகரத்தைக் கண்ட பத்திரமித்திரன் இந் நகரத்திற்கே நிலையாகக் குடி வந்துவிட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு, தான் கொண்டு வந்திருக்கும் அரிய ரத்தினங்களடங்கிய செப்பை யாரிடம் அடைக்கல மாக வைத்துச் செல்வதென ஆராய்வ தானான்.

அங்ஙனம் ஆராயும்பொழுது, பத்திரமித்திரன் அரச னுடைய மந்திரி ஸ்ரீபூதி யென்பானே குடி மக்களால் சத்திய கோஷன் என்னும் சிறப்பைப் பெற்றிருக்கின்றா னென்பதை யறிந்தான். அறிந்ததும் அவனை யடைந்து தன் கருத்தை வெளிபிட்டுத் தான் இந்நகரம் வருமளவும் தனது இரத்தி னச் செப்பைக் காப்பாற்றிக் கொடுக்கும்படி வேண்டிக் கொண்டான். அமைச்சன், 'நீ கொடுப்பது பெரும் பொருளா யிருப்பதனாலே என்னிடம் யாரும் இல்லாத சம யத்தில் அச் செப்பினைத் தருவாய்' எனலும், பத்திரமித்திர னும் அவன் குறிப்பிட்ட வாறே இரத்தினச் செப்பினை அவ னிடம் கொடுத்துத் தன் ஊர் சென்றான்.

சென்றவன் தன் பந்துமித்திரர்கட்குத் தான் கண்ட நகரத்தின் சிறப்பைச் சொல்லி அவர்களையும் தன்னுடன் வர உடன்படுத்தி, உள்ள பொருள்களை எடுத்துக்கொண்டு யாவ ருடனும் சிம்மபுரத்தை யடைந்து ஒரு இல்லத்திற் றங்கி, அடைக்கலமாக வைத்த இரத்தினச் செப்பை அமைச்ச னிடஞ் சென்று கேட்டனன். அமைச்சன் அப்பெரும்

பொருளின்மீது மோகங் கொண்டு பத்திரமித்திரனைப் பார்த்து, 'நீ யார்? ஏது என்னிடம் மணிச்செப்பு, உன்னை யார் கண்டது போ! போ!!' என்றனன். பத்திரமித்திரன் மனந் திடுக்கிட்டு, 'ஐயா, நான் தான் சின்னாட்களுக்கு முன் தங்களைக் கண்டு, மணிச் செப்பை அடைக்கலமாக வைத்துச் சென்றவன், அதற்குள் தாங்கள் மறந்து விட்டீர்களோ?' என்றான். அதற்கு அமைச்சன், 'நீ என்ன பைத்தியக்காரனா யிருக்கின்றாய். நீ என்னிடம் மணிச் செப்பு வைக்கும்போது யார் சாக்ஷி' என்று அதட்டிக் கேட்டனன். அதற்கு அவன், 'சுவாமி! சாக்ஷி வேண்டுமென்ற சட புத்தி உம்மிடம் அப்பொழுது இருப்பதாக உம்முடைய வசன சாமர்த்தியத்தால் அறியாமற் போனேன். பிறர் பொருள் கோடல் மாற்றல் முதலியன மறமென்று நீதி பகர்ந்த நீர் இவ்வாறுரைப்ப தேனோ? எனது ரத்தினச் செப்பைக் கொண்டிருப்ப தன்றி, என்னைப் பைத்தியக்கார னென்றும் விளிக்கின்றீர். இது உமது பதவிக்குத் தகுதியுடைய தன்று' என்றான்.

இதைக் கேட்டதும் சத்தியகோஷன் மிகவும் கோபங் கொண்டு ஓடி அவனை அடிக்கவும், அவனுழை யிருந்தோர் அவனைப் பிடித்து வெளியே தள்ளி விட்டார்கள். பத்திரமித்திரன் மனம் கலங்கி தெருக்க டோறுஞ் சென்று 'ஏ ஜனங்களே! இந் நகரத்து மந்திரி சத்திய கோஷ னென்று கொண்டாடுகின்றீர்களே! இவனிடம் நான் அடைக்கலமாக வைத்த மணிச் செப்பைக் கேட்டால் இல்லை யென்று அசத்தியஞ் செய்கின்றான்! என்னைப் பைத்தியக்கார னென்று விளக்கின்றான். இதனைக் கேட்பார் யாரும் இல்லையா! அரசனாவது விசாரித்து நீதி வழங்கக் கூடாதா!' எனப் பலகாலுஞ் சொல்லித் திரிந்தான்.

சத்தியகோஷன், பத்திரமித்திரன் செய்கையால் தனது மோசம் வெளிப்பட்டு விடுமோ வென்று ஐயங் கொண்டு அவனை நகரத்தினின்றும் துரத்திவிட அவன் பொருளை யெல்லாம் கொள்ளை கொள்ளும்படி ஏவலாளர்க்குக் கட்டளை யிட்டனன். அவர்கள் அவன் தங்கி யிருந்த இல்லத்தி லுள்ள பொருளை யெல்லாங் கொள்ளை கொண்டனர். பத்திரமித்திரன் இதனைக் கண்டு மேலும் துக்க முடையவனாய் 'அந்தோ! மந்திரி என்னுடைய மணிச் செப்பை இல்லை

யென்று சொன்னதோடு அமையாது என் வீட்டிலுள்ள பொருள்களையுங் கொள்ளை கொண்டாரே! இவ் வநீதச் செய்கையை விசாரிப்பார் இந் நகரத்தில் யாரும் இல்லையா ?" என்று கூறிப் புலம்பிக்கொண்டு திரிந்தான்.

அவன் இவ்வாறு கூறித் திரிவதை அரசன் கண்டு, இதன் உண்மையை அறிய மந்திரியை அழைத்து, 'மந் திரியே! வீதிகளில் திரியும் ஒருவன் மணிச் செப்பை மந் திரி அபகரித்துக் கொண்டார்' என்று கூறிப் புலம்புவதற் குக் காரணம் என்ன'வென்று வினவ. மந்திரி, 'சுவாமியே! நான் அவனை அறியேன் ; அவனுடைய மணிச் செப்பையும் அறியேன். எவனோ பைத்தியம் பிடித்தவன் இவ்வாறு உளறித் திரிகின்றான். நான் பிறர் பொருளைக் கவர்வேனு கில் உலகில் எவர் தான் அவ்விதஞ் செய்யாம லிரார். தர்மஞ் சொல்லும் நானே அவ் வதர்ம காரியத்தைச் செய் வேனு!' என்று கூறித் தன்னை யாரும் நம்பும்படி சத்திய முஞ் செய்தான். அரசன் அவனுடைய சத்தியத்திற்கு மதிப்பு வைத்துப் பத்திரமித்திரனைப் பைத்தியக்கார னென்றே தீர்மானித்தனன்.

அரசன் அவ்வாறு தீர்மானித்ததைப் பத்திரமித்திரன் கண்டு 'அரசனே மந்திரியினது மோசச் செய்கையை அறி யாமல் என்னைப் பைத்தியக் காரனென்று தீர்மானித்தால் வேறு யார் தான் எனது ஸ்திர புத்தியை அறியப் போகி றூர்கள்? தழைகளால் தன்னை மறைத்துக்கொண்டு பக்ஷி களைப் பிடிக்கும் வேடனே போல இந்த மந்திரியும் சத்திய கோஷ னென்னும் பெயரை மேற்கொண்டு தனது மோசச் செய்கை வெளிப்படாமல் என் மணிச் செப்பை அபகரித் துக்கொண்டு யோக்கியனே போல நடிக்கின்றான். இவ்வுண் மையை அறிவார் இந்நகரில் எவரும் இல்லையோ வென்று மேலும் மேலும் சொல்லிக்கொண்டு அழுது திரிந்தான்.

இவ்வாறு அவன் சொல்லித் திரிவதைக் கண்டு பொறு மல் சத்தியகோஷன் ஏவலாளர்களை யழைத்து, இப்பைத் தியக்காரன் மேல் மத யானையையும் நாய்களையும் ஏவ விட் டுத் துன்புறுத்தி இவனை இந் நகரினின்றும் துரத்தி விடுங் கள் என்றான். அக்கொடுவினை யாளரும் அவ்வாறே செய் யத் தலைப்பட்டனர். பத்திர மித்திரன் இக்கொடுஞ் செய் கைக்கு அஞ்சிப் பகற் பொழுதெல்லாம் அரசன் அரண்

மனைக்கடுத்த மாத்தின் மேலேறி யிருந்துகொண்டு வழக்கம் போல மந்திரியின் மோசச் செய்கையை அரசன் செவிகளுக் கெட்டும்படி கூறிக்கொண்டு வந்தான். அரசன் மந்திரியின் மீதுள்ள நம்பிக்கையால் இவனைப் பைத்தியக்கார னென்றே தீர்மானித்து அவன் கூறுவதைப் பொருட்படுத்தாமலே யிருந்து விட்டான்.

அரசன் மனைவி இராமதத்தை, பத்திரமித்திரன் ஒரு நாள் போலப் பல நாளும் ஒரே விதமாகக் கூறி வருவதை ஆராய்ந்து பார்த்து, 'இவன் பைத்தியக்கார னல்லன்; பைத்தியக்காரனாயின் ஒரு தடவை சொன்னதை மறுதரஞ் சொல்லான்; இவனோ மாறுபா டில்லாமல் ஒரே விஷயத் தைச் சொல்லிக்கொண்டு வருகின்றான்; இவன் கூறும் செய்கை சத்திய கோஷனிடம் இருந்தாலும் இருக்கலாம்; எதற்கும் தீர விசாரித்துப் பார்ப்போமென்று கொண்டு பத் திரமித்திரனை யழைத்து, உண்மை யாதென விசாரித்தாள். அவன் நடந்தவற்றை யெல்லாம் விடாமற் கூறினான். அரசி, 'அங்ஙன மாயின் நீ முன் போலவே சொல்லிப் புலம்பிக் கொண்டிரு; நான் அதனை வெளிப்படுத்த உபாயஞ் செய் கின்றேன்' என்று கூறி அவனை அனுப்பிவிட்டு அரசன்பா லணுகி, 'இங்கே பொருளைப் பறிகொடுத்து ஒருவன் பல நாளும் புலம்புகின்றானே, அதனை விசாரித்து நீதி வழங்க லாகாதா அரசே!'' என்றனள்.

அதற்கு அரசன், 'அவன் பைத்தியக்காரன். அதனை விசாரிப்பதில் பயனில்லை' என்றான். தேவி, 'பைத்தியக் காரன் மொழிகள் இவ்வா றிரா; பைத்தியக்காரன் ஓரமயம் புகன்றதை மற்றோ ரமயம் புகலான். இவன் கூறுவது உண்மையாயும் இருக்கலாம்' என்றாள். 'அவ்வாறாயின் இதன் உண்மையை நீயே காண்பாயாக' என்றான் அரசன்.

இராமதத்தை, 'இதன் உண்மையை விளக்குப் போல காட்ட வல்லேன். ஆனால் மந்திரியோடு சூதாட எனக்கு அனுமதி வேண்டும்' என்றாள்: மன்னன், நீ அவ்வாறே செய்க என்றான். அதன்மேல் அரசி மந்திரியை அழைப் பித்து வேடிக்கையான சில வசனங்கள் பேசி, 'என்னைப் போல் சூதாடுவதில் வல்லமை யுள்ளார் எவரும் இலர்' என் றான். மந்திரி, 'இது மிக்க அழகிதென்றான்' அரசி மேலும்

'ஒரு வார்த்தை பேசி முடியும் எல்லைக்குள்ளாகவே மந்திரியை வெல்வேன்' என்றாள். மந்திரி, 'இவ்வம்மையைச் சூதாட்டத்திற்குக் காய்கள் பூட்டும் அளவிலேயே வெல்வேன்' என்றான். மந்திரி அரசன் முகம் நோக்க, அரசன் புன்சிரிப்பு கொண்டு இவ் வினைக்கு அனுமதி தந்தவன்போல மௌனங் கொண்டான். உடனே அரசன் தேவிக்கும் மந்திரிக்கும் சூதுப் போர் நிகழ்ந்தது. முத லெடுப்பிலேயே மந்திரியின் பூணூலையும் முத்திரை மோதிரத்தையும் முறையாக அரசி ஜயித்துக்கொண்டாள். அதனால் மந்திரி பெரிதும் அவமான மடைந்தான்.

அதன் பின் இராமதத்தை நிபுண மதியென்னும் தனது செவிலியை அழைத்து வேதியன் மார்பு நூலையும் முத்திரை மோதிரத்தையுங் கொடுத்து அவளைப் பார்த்து, 'நீ சத்திய கோஷனுடைய பொக்கிஷதாரனிடம் இவைகளைக் காட்டி உபாயமான வசனங்கள் புகன்று பத்திரமித்திரன் குறிப்பிடும் மணிச் செப்பைப் பெற்று வருவாயாக' வென்றனள். அவள் அவ்வாறே சென்று சத்திய கோஷனது பொக்கிஷதாரனைப் பார்த்து, 'அரசனும் தேவியும் மந்திரியை அழைத்து பத்திரமித்திரனது செப்பு உன்னிட மிருந்தால் அதனைக் கொடுத்துவிடு' என்றார்கள். மந்திரி பத்திரமித்திரனது முறைப்பாட்டினால் தனக்குப் பழி வருமென் றஞ்சி அரச தம்பதிகளை நோக்கி, 'தருமம் கடைப்பிடித் தொழுகும் உத்தமர்க்கு வரும் பழிகளை விலக்க முடியாது. அதுபோலவே எனக்கும் இப் பத்திரமித்திரனால் பழி படர்வ தாயிற்று. பத்திர மித்திரன் மணிச் செப்பு கொடுத்த துண்மையே. அவன் அதனை மீண்டுங் கேட்கின்ற காலத்தே மறதியின் காரணமாக எது செப்பு, இல்லைபோ! என்றேன். பத்திரமித்திரன் அடுத்தடுத்துப் பழித்ததற்குப் பின்னரே அவன் செப்பு கொடுத்தது நினைவுக்கு வந்தது. முதலில் இல்லையென்று சொல்லிப் பின்னர் உண்டு என்றால், அதனால் முன்னினும் பழி பெரிதாகுமே வென்றஞ்சி அவன் பன்முறை வேண்டிக்கொண்டும் நான் அதைக் கொடாமலிருந்து விட்டேன். தங்கள் தயவிருந்தால் எனக்கொரு தாழ்வும் வராது. உத்திரவிட்டால் மணிச்செப்பைக் கொடுத்து விடுகின்றேன்' என்றார். அரசன், 'உனக்குப் பழிவராமல் பத்திரமித்திரனை யழைத்து,

எனக்குப் பைத்தியம் பிடித்திருந்ததனால் மந்திரியின் மீது பழி கூறினேன். இஃதுண்மையல்ல. எனக்கிருந்த பைத்தியம் ஒரு முனிவரால் நீங்கியதென்று ஊரார் அறியும்படி கூறச் செய்கின்றேன். நீ மணிச்செப்பைக் கொடுத்துவிடு' என்றார். சத்தியகோஷன் அதற்கு உடன்பட்டு முத்திரை மோதிரத்தையும் பூணூலையும் என்னிடம் தந்து உன்னிடம் காட்டி மணிச்செப்பைப் பெற்றுவர ஏவினார். இது இரகசியமான காரியம். யாரும் அறியாமல் அம் மணிச்செப்பை என்னிடம் கொடுத்துவிடு, என்றாள். பொக்கிஷதாரனும் இஃதுண்மையென்றே கொண்டு பத்திரமித்திரன் அடைக்கலம் வைத்த மணிச்செப்பை அவ்வம்மையிடம் கொடுத்தான்.

நிபுணமதி தான் சென்ற காரியம் முடிந்ததற்குச் சந்தோஷித்து, மணிச்செப்பைப் கொண்டு சென்று அரசியிடம் சேர்த்தாள். அரசி அதனைப் பெற்று செவிலியைப் புகழ்ந்து தன் முயற்சி பலித்ததற்கு மகிழ்ந்தாள். பின்னர் அரசி பெற்ற மணிச்செப்பை அரசனிடம் காட்டி மந்திரியின் நடத்தையை விளக்கினள். அரசன், 'இம் மந்திரியைக்கொண்டு நான் செய்த அரசு வெகு அழகிது' என்று சிரித்துத் தேவியின் விழைவின் வண்ணம் பத்திரமித்திரனது உள்ளக்கிடக்கையைச் சோதிக்கக் கருதி அம்மணிச்செப்பில் வேறு பல உயர்ந்த இரத்தினங்களையும் கலந்து முத்திரையிட்டு இதைப்போன்ற மணிச்செப்புக்களையும் வரவழைத்து அவற்றுடன் இதனை வைத்து, பத்திரமித்திரனை யழைத்து 'உனது மணிச்செப்பைக் காட்டுவாய், என்றான். பத்திரமித்திரன் தனது மணிச்செப்பைத் தவறுமற் காட்டினன். அரசன், 'ஆனால் இதிலிட்ட முத்திரை உன்னுடையது தானா பார்' என்றான். அதற்கு அவன், 'இம் முத்திரை என்னுடைய தன்று, என்றான். அங்ஙனமாயின் அதனுள்ளிருக்கும் இரத்தினங்கள் உன்னுடையது தானா பார், என்றான் அரசன். பத்திர மித்திரன் அதனைத் திறந்து பார்த்து என் இரத்தினங்களுடன் வேறு விலையிலா இரத்தினங்களும் விரவி யிருக்கின்றன' என்றான். அரசன், 'உன்னுடைய மணிகளோடு வேறு உயர்ந்த மணிகளை யார் கலக்கப் போகின்றனர்? நீ உன்னுடைய ரத்தினங்களைத் திரும்பப் பெற்ற மகிழ்ச்சியின் மயக்கத்தினால் இவ்வாறு

உரைக்கின்றாய்; நன்றாய்க் கவனித்துப்பார்' என்றான். அதற்கு அவன், 'சுவாமியே நான் அவ்வாறு என் மணிகளை மறந்து மயக்கங்கொண்டு புகல்வேனே யாகில் என்னை யாவரும் பைத்தியக்காரனென்று மதித்தது தவறாகாது. நான் எப்பொழுதும் மறந்து தவறு சொல்லேன்' என்று கூறி தனது இரத்தினங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு மற்ற இரத்தினங்களை ஒதுக்கிவிட்டான். அரசன் அதனைக்கண்டு, 'இந்த இரத்தினங்கள் மந்திரியினுடையவை. இதனை நீயே எடுத்துக் கொள்ளுவை' என்றான்.

பத்திர மித்திரன், 'நான் பிறர் பொருள் கவர்ந்து வாழும் தன்மையுடையேனல்லேன்; அப்பொருள்கள் தான தர்மங்களுக்கு உரியனவல்ல; அவை மானம் போக்கும்; ஈனத்தைச் சேர்க்கும். அவை அடைந்தோரை அடிமைகளாக்கி தீக்கதி செலுத்தும். ஒருவருக்கு இன்ப துன்பங்கள் முன் வினையின் அளவே பொருந்தும்' என்று சொன்னான். அரசன் இந்நீதி மொழிகளைக் கேட்டு, 'இவ்வணிகன், பொய்யாவாக்கினன்; பிறர் பொருள் நசையில்லான்; தரும நீதி சமநிலை தயவு ஒழுக்கம் இவை யெல்லாம் ஒரு உருவெடுத்தாற்போன்று விளங்குகின்றான்' என்று பத்திர மித்திரனைப் புகழ்ந்து அவனுக்கு இராஜசிரேஷ்டி யென்னும் பட்டம் ஈய்ந்தனன். இவை யெல்லாம் கண்ட அரசன் தேவி வெற்றி பெற்ற வாதி வழக்காளி போல மனமகிழ்ந்தாள். மற்றைய நகர ஜனங்கள், 'இவ்வணிகன் நல்ல ஞானியும் பெரியோனுமானதால் மந்திரி யிழைத்த பல இடையூறுகளுக்கிடையே அகப்பட்டு முடிவில் வெற்றி பெற்றான். இவன் முயற்சி போற்றற்குரியது' என்றனர்.

அதன்பின் அரசன் வஞ்சித்தொழுகிய மந்திரியாகிய வேதியனை அரசநீதிப்படி தண்டிப்பதற்கு நீதிவல்லுநருடன் ஆராய்ந்து அவனுக்குப் பெரிய தண்டனை விதித்தான். தண்டனை நிறைவேற்றுவோர் முற்பகல் மந்திரியாய் விளங்கினான் என்பதையும் பாராது அவனைப் பற்றி அவன் மத்தகத்தில் முப்பது சவட்டையடி கொடுத்து எருதின் சாணம் ஊற்றி முழுக்காட்டி நாடு கடாத்தி அவன் பொருள்களையும் பறிமுதல் செய்து விட்டனர். சத்திய கோஷன் தனக்கு நேர்ந்த இந்தப் பெரிய அவமானத்தினால் கவலை நோய்ப்பட்டு மாணமுற்று அரசன்பால் வைத்த துவேஷத்தினாலும்

பொருளாசையினாலும் அரசனது பொக்கிஷ சாலைக்குள் அகந்த னென்னும் சர்ப்பமாய் ஜனித்தனன்.

இவ் வரலாற்றினால் நாம் காண்பது என்னை யெனின்:—

மோக மேபிற விக்குநல் வித்தது
மோக மேவினை தன்னை முடிப்பது
மோக மேமுடி வைக்கெட நிற்பது
மோக மேபகை முன்னை யுயிர்க்கெலாம்.

மோக மேதிரி யக்கிடை யுய்ப்பது
மோக மேநர கத்தில் விழுப்பது
மோக மேமற மாவது முற்றவும்
மோக மேயற மாசுற நிற்பதும்.

மோக மேநிறை யாநிறை யாயது
மோக மேமூ வுலகின் வலியது
மோக மேமுனி மைக்கிடை யூறது
மோக மில்லவர் நல்ல முனிவரே.

(தொடரும்.)

புத்தபோதம்.

(ஸ்ரீ காசி—K. வேகங்ட்டராமய்யர் அவர்கள் எழுதியது.)

(முன் 61-ம் பக்கத்தொடர்ச்சி)

நில்லாத வற்றை நிலையன வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை—குறள்.

வைராக்கியத்தின் பிரயோஜனத்தையும் தத்துவத்தையும், பாலியாவஸ்தையிலேயே பலவாறாகப் பன்னிப்பார்த்த பகவான் புத்தன், பழுது படா நெஞ்சத்தோடு, லௌகிக சுகத்திற்கு சாதகமான மனை, மனைவி, மக்கள் முதலிய மாயாப் பிரபஞ்சத்தையும் மதிப்புறு தனத்தையும், ஒருங்கே நிராகரித்து, நாவல் மரத்து நிழலில் தோன்றியதான நிர்வாண பேரின்பத்தை, நிலை பெறப் பெறுவதின் நிமித்தம், நீண்ட முயற்சியின் நெறியுட் புகுந்தனன். தனது தற்போத நிலையுட் பார்த்த தாகிய நிர்வாண சாதனத்திற் குரிய

210364

மார்க்கம் அதாவது ஆத்மானந்தத்தைப் பற்றிய எண்ணமானது இவனுக்கு மாத்திரம் புதிதாகத் தோன்றியதல்ல. பிறப் பிறப்பென்னும் பந்தத்தினின்று பிரிந்து, பேரின்பத்தைப் பெறவேண்டிய நோக்கம், பரதகண்டத்தில் புராதன உபநிஷத்து காலம் முதற்கொண்டே, நினைப்பிலும் நடையிலும் தலைமுறை தத்துவமாக நிகழ்ந்து வந்தது. அதிபுத்திமான்களாகவும், கீர்த்திமான்களாகவும் விளங்கிய நம் முன்னோருள் பெரும்பாலர் சாந்தி சுகத்தை நாடி, சகல வைபவங்களையும் துறந்து இருடிகளாய்த் தமது வாழ்நாளைப் போக்கினார்கள். நாடிய இச்சுகத்திற்காக வேண்டி பலிதானமாகச் செய்த சம்பத்திற்குக் கங்கு கரை யில்லை. சித்திரவதை போன்ற மெய் வருத்தத்திற்கும், வேறு சாம்ய மில்லை. நாடிய விஷயம் ஒன்றே யாயினும், நடைபெற்ற நெறி முறைகள் பலவாயும் அடிக்கடி மாறுபா டடைவதாயு மிருந்தன. பகவான் புத்தன் காலத்தில் வழங்கி வந்த சில சமய முறைகளை இங்கு திருஷ்டாந்தமாக எடுத்துக் கூறுவாம். பாலி கிரந்தங்களில் பலவாறாக எடுத்துக் கூறப்பட்ட பந்ததிகளைச் சார்ந்த யாதாம் 30, 40 வகுப்பினர்கள் கௌசலா நாட்டில் அங்கு மிங்கும், சஞ்சரித்து வருவது வழக்கம். எதேச்சையாய் இவர்களில் அநேகர் ஓரிடத்தில் கூடுமிடத்துத் தத்தம் சமயத்தின் நேர்மையைப் பற்றி வாத விவாதம் புரிவது முண்டு. புத்த பதவியை யடைந்த பின்னர் பகவான் புத்தன், இவைகளில் எதையும் மிகுதியில் சன்மானித்ததாகத் தெரியவில்லை.

வைதீக பந்ததி. இவ்வாறான பந்ததியுள் முக்கியமானது வைதீக பந்ததி. இதில் இரண்டு முக்கிய பேதங்கள் காணப்படும். வேதாத்தியானத்தைச்செய்து, அவ்வேதங்களில்பிரதிபாதித்ததான யக்கிய யாகாதிகர்மங்களைக் குறையற நடத்தி வாழ்பவர் ஒரு சார். இவர்கள் "இல்லற மல்லது நல்லற மன்று," "அற னெனப் பட்டதே இல் வாழ்க்கை" "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற உறுதிப்பா டுடைய நெஞ்சத் தவர்களாகும். சர்வ சங்க பரித்தியாகஞ் செய்து வனத்தில் வசிப்பவர்களாய், அக்கினியோத்திராதி விரதங்களையும் ஜபதபாதி சாதனங்களையும், அனுஷ்டித்து நித்திய சன்னியாசிகளாக இருப்பவர்கள் மற்றொரு சார்.

உறவு தந்தை தா யொண்டொடி மாதரார்
சிறுவர் வண்புவி செல்வம் பெரும்புகழ்
பெறலினும் படு மாசை பிரிந்த மெய்த்
துறவி னல்லது துன்ப மகலுமோ?

ஒரு போது மகலாது.

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்

என்று இல்லறத்தை விடுத்து

தவஞ் செய்வார் தங் கருமம் செய்வார்மற்
றவஞ்செய்வா ராசையுட் பட்டு

என்று சுகபோகத்திற் குரிய ஆசையையும் துறந்து

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுந் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு

என்று தபானுஷ்டானத்தால் நேர்வதான துன்பங்களைப் பொருட்டாக்காது பேரின்பத்தை நாடி இங்ஙன முயல்பவர் இவர்களே யாம்.

இவ்விரு வகுப்பினருடைய முக்கிய நோக்கம் பிரம்ம சாயுஜ்ஜிய பதவியை அடைவதே யாகும். எனினும், இவ்விரு திறத்து மத பேதங்கள் பலவாருக வர்ணித்திருப்பதை "தீக நிகாயம்" என்னும் கிரந்தத்தில் சவிஸ்தாரமாகக் காணலாம்.

இல்லறம் துறவறம் என்னும் இரு மார்க்கத்துள் எது சிறந்தது என்பதைத் தீர்மானிப்பான் வேண்டி, வசிஷ்ட மகரிஷியும், பாரத்துவாஜ முனியும் வாத விவாதம் செய்ததாகவும் அதின் விபரமும் இந்த நூலில் குறித்திருக்கின்றதாம்.

ஸ்ரமண பந்ததி. இம்மையின் துன்பத்தினின்று ஈடேறவே இம்மதத்தின் நோக்க மாயினும், இதனைச் சாதிக்கும் முறைகள் பலரால் பலவாருக தழுவப் பட்டதால், இதிலும் மத பேதங்கள் அநேகம் உண்டாயின. இதனுள் முக்கியமாக ஆறு பிரிவுகளைச் சார்ந்தவர்கள் கௌசலா நாட்டில் மிகுதியாக மதிக்கப்பட்டு வந்தார்கள். அக்கிரியர், சம்சார சுத்தர், உச்சேதர், அன்னியோன்னியர், சாதுர்யாம சம்வரர், அதவாநிர் கிரர்த்தியர், விக்ஷேபர் என்னும் பிரிவுடைய ராயினர். இப் பிரிவுகள் கேவலம் நாம பேதங்களே

யாகும். வித்தியாசம் அதிகமில்லை. 'சாமக்கிய பல சுதம்' என்னும் புத்த கிரந்தத்தில், இந்தப் பந்ததியை மகாவீர ஸ்வாமி உண்டு பண்ணினர் என்று கூறப்படுகிறது. ஆனால் ஸ்மாண கிரந்தத்தில், மகாவீர ஸ்வாமிக்கு 250வருஷத்திற்கு முன்னரே பார்ஸ்வ தீர்த்தகர் இந்தப் பந்ததியை ஏற்படுத்தியதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. துன்புறுத்தல், பொய் மொழிதல், களவு செய்தல், தானம் வாங்குதல் ஆக இந் நான்கு தீவினைகளைத் தவிர்த்தலே இம் மதத்தின் மூல தத்துவமாம். இந்நான்கை அடிப்படையாகக் கொண்டு தான் "சாதுர் யாமம் அதாவது நான்கு கொள்கை" என்னும் பெயர் சித்தித்தது போலும். ஆனால் பின்னர் தோன்றிய மகாவீரன் மைதுன நிவர்த்தியையும் இதனுள் இணைத்தனன் போலும். இப் பந்ததியோருக்குப் புனர் ஜன்மத்தில் நம்பிக்கை இருந்ததாகவும் காணப்படுகிறது.

இதர பந்ததிகளை விடுத்து இதனை மாத்திரம் இங்கு விஸ்தாரமாக விவரித்ததின் கருத்து பௌத்த தருமம் முக்கியமாய் இதை அனுசரித்ததென்று படிப்பவர்கள் முன்னிலையில் நிரூபிப்பான் பொருட்டே யாகும். பகவான் புத்தன் 'கொலை, களவு, பொய்' முதலியவற்றை நிராகரிப்பதற் குரிய தத்துவங்களைத் தனது மதத்தின் கோட்பாடாகக் கொண்டனன். தானம் சேர்க்கை இவைகளுக்கு அடைமொழியைக் கொடுத்து, துராக்கிரக தானம், வேசையின் சேர்க்கை எனப் பாகுபாடு செய்து இவைகளை இல்லறத்திற்கென விதித்தனன் என்று கூறுமிடத்து அது அசம்பாவிதமாகாது. ஸரமண மதத்தில் பற்பல பிரிவுகள் இருந்ததென்று முன்னரே கூறியுள்ளோம். அவைகளுள் தற்போது உயிர்த்திருப்பது "ஜயின தர்மம்"—

இனி மற்ற ஐந்து பந்ததிகளைக் கவனிப்போம். முதன்மையான 'அக்கிரியம்' என்னும் பந்ததிக்கு அத்தியக்ஷ கர்த்தா "பூர்ண காஸ்ய சர்வ சுகதுக்கத்திற்கு மூலகாரணம் 'பாவனை', இந்த பாவனையை முற்றும் வேரறுத்து விடுதலே இப்பந்ததியின் மூல தத்துவம்-பாவ புண்ணியங்களைக் குறித்து எண்ணுவது ஓர்வித பிராந்தி யென்று இம் மதம் கூறுகிறது.

சம்சார சுத்திவாதி. இந்தப் பந்ததியை உற்பத்தி செய்தவர் 'மக்கலிகோல்'. இவருக்கு மறுநாமம் 'வாதபிரிய திவாதர்'

சிருஷ்டியில் சராசர வஸ்துகளெல்லாம், பிராணிகளும், ஜீவன் களும், சக்தி குறைந்தது, சுதந்தர மற்றது. ஆதலால் இவைகள் சர்வ தேவனின் சுந்தரத்தால் இருக்கின்றன வென்றும், ஒவ்வொன்றும் தத்தம் உபபோக வுணர்ச்சியை வகிக்கிறதென்றும், இவ் வுணர்ச்சியை முன்னிட்டு இவைகள் செல்லுகின்றன வென்றும், இம்முயற்சி எதனிடத்திலும் ஒருபோதும் தவர மாட்டா தென்றும் நம்புவதே இந்த மதத்தின் கோட்பாடாம்.

உத்தேஜவாதி—இதை ஸ்தாபித்தவன் அஜிதகேச கம் பளி. இவன் ஒரு தனித்த நாஸ்திகவாதி. பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்பதான நான்கு தத்துவங்களால் மனிதன் செய்யப்பட்டுள்ளான். மரண மென்றால் இவைகள் மூல தத்துவத்தோடு போவதற்காகப் பிரிவதேயாம். இந்திரி யங்கள் ஆகாசத்தில் லய மாகிறது. பாவ புண்ணியம் என் பது முற்றும் மனோபாவனை, லௌகீக சுகமொன்றே உண்மை. இவைகள் இந்த மதத்தின் கொள்கைகள்.

மீந்ததான விக்ஷேபவாதி பந்ததி ஜயின மதத்தின் கோட்பாடுகளை மிகுதியா யனுசரிக்கிற தென்றே சுருக்க மாகக் கூறி முடிப்பாம்.

பகவானின் குரு. மேற்கூறிய வெவ்வேறு மதங்கள் இவன் காலத்தில் மதிப்புடன் நிகழ்ந்து வந்ததென் றிருப் பினும், தான் கருதியதான சாந்தி சுகத்திற்கு இவைக ளுள் எதைத் தழுவினன் என்று எவ்விடத்தும் நிர்ணய மாக விவரிக்கப் படவில்லை. தான் தனது மனையை விட் டகலுவதற்கு முன்னர், கபில வஸ்துவின் கண்ணே 'ஆலாரா காலாம்' என்னும் பெயரை யுடைய ஒரு பெரியவ ரிடம் இவன் எப்போதும் வந்து போவதுண்டு. இவனே இவன் குருவாக லாம். பரிவிராஜனாக பதவிக்கு வந்து திரிந்துகொண் டிருக்கையில், பகவான் கௌதமன் திரும்பக் கபில வஸ்துவிற்கு எழுந்தருளியபோது, இவன் தங்குவ தற் குரிய தகுதியான இட மொன்று, இவன் சிறிய தந்தையார் மகா நாம சாக்கியன் தேடிக்கொண் டிருந்தான். அப்போது, பகவானின் பழைய தோழனும், 'ஆலாரா காலாமின் சீடனுமான "பரண்பிரமானனின்" ஆசிரமத் திற் கடுத்து வேறு இடம் கிடைக்கவில்லை யென்றதோர் குறிப்பு 'அங்குதாணிகை'யில் காணப்படுகிறது.

இதனின்று பகவான் பாண்பிரமானனின் குருவாகிய ஆலாரா காலாமனின், சீடனென்றும், பாண்டுவின் ஆசிரமம் கபில வஸ்துவில், வெகு காலமாக இருந்த தென்றும், (இப்படிக் கில்லாம விருந்தால் பகவான் இங்கு தங்குவது தகுதியா யிருந்திராது) ஒரு வித பொது அனுமானம் எளிதில் நிலைபெறுகின்றது.

'போதிசத்வன் எப்படி கோசல தேச வாசியோ அப்படியே ஆலார காலாமும் கோசல தேசத்தவனே யாகும். அங்குதரநிகாயத்தில் இவன் பூர்வமாக வசித்த இடத்தின் பெயர் 'கேசபுத்த' என்று கூறப்பட்டிருக்கிறது. மேலே கூறிய ஆறு மதஸ்தாபகர்கள் போல ஆலாரகாலாம் கியாதி பெற்றிரா விட்டாலும் கோசல தேசத்தில் அதிலும் கபில வஸ்து நகரில் இவனுக்கு அதிக மதிப்புண்டு போலும். அரிய பரியேசன சுத்தத்தில் 'பரி விராஜனுகை நான் கிளம்பிய பிறகு பரம கல்யாண குணத்தை அடைவதற் கென்று, உலக திருஷ்டியில் பிரசித்தி பெற்றதா யுள்ள யாதா மொரு வசதியை சாந்திக்கு உறை விடமாக கொள்ள வேண்டு மென்றே அலைந்து திரிந்து ஆலார காலாமவின் ஆசிரமத்தை நான் அடைந்தேன்'' என்று சொன்னதாகக் குறிப்பிட்டிருக்கிறது. ஆலார காலாமனின் ஆசிரமத்தில் பன்னிரண்டு தினங்கள் தங்கி, சிரேஷ்ட ஸ்ரமணன் என்னும் புகழை யடைந்து முமுக்தனுன கௌதமனுக்கு, இவ்விடத்திய பரிச்சய மில்லை யென்று சொல்ல முடியாது. பரிவி ராஜனுன பிறகு முதலில் ஆலார காலாமனிடம் போகவேண்டினு னென்னும் அனுமானம் இத னின்றும் உறுதிப்படுகிறது.

> முதலிலார்க் கூதிய மில்லை—மதலையாஞ்
> சார்பிலார்க் கில்லை நிலை.

என்றுதானே இவன் இங்கு வந்து தங்கினது!

இராஜகிரிக்குச் செல்லுதல். மேற்கூறிய விபரங்களினின்று ஆலார காலாம் இவனது குருவாய் இருந்தானென்று நிதானிக்கு மிடத்து அது விபரீதப் படாது. இனி கௌதமன் அவனிட மிருந்து எவைகளை சுவீகாரம் செய்தனன் என்று பார்ப்போம். நான்கு தியானமும் பின்னர் ஆகாச நிலை விக்ஞானநிலை அகிஞ்சன நிலை அதாவது பற்றற்ற நிலை என்பதாகிய சித்தர்நிலை மூன்றையும் உபதேசித்தனன். இவைகள்

ஏழும் சமாதிசிகரத்தை அடையச் செய்யும் சாதனங்களாம். ஆனால் இவைகளைக் கொண்டு போதிசத்வம் சமாதான மடைவதா யில்லை. இவைகள் யோக மார்க்கத்தில் இருக்கு மொருவனைச் சிறிது காலம் வரை சித்த விருத்தியை அடக்கி சமாதி சாந்தியிடம் நிலை பெறச் செய்வதா யிருந்தபோதிலும் இவை பொதுவாக சகல ஜனங்களும் அனுசரிப்பதற் குரியதென்று விதிப்பதற்குத் தகுதி யற்றவைக ளென்று தீர்மானித்தான். नामं मन्मा सबो धाश இதனால்தான் கபில வஸ்துவினிடமிருந்து 'உத்தகராமபுதன்' என்னும் சாதுவிடம் வந்து சேர்ந்தான். அவனும் ஆலாரகாலாம் எந்தக் கூட்டத்தைச் சார்ந்தவனா யிருந்தானோ அதே கூட்டத்தைச் சார்ந்தவனா யிருந்தான். அவன் போதி சத்வத்துக்கு அகிஞ்ன நிலையுள் மேன்பாடுள்ளதான ஒன்பது சம்ஞான சம்ஞானமாகிய சாதனங்களை உபதேசித்தான். இவைகளாலும் போதி சத்துவதற்குச் சமாதான முண்டாகவில்லை. இந்நெறி முறைகள் முந்தியவைகளை விட சுலபமாக இருந்த போதிலும் இவைகள் முற்றுப் பெற்றதாகவில்லை. இது காரணங்கொண்டு போதி சத்வன், சாமணர்களின் பயிற்சிக்கு உயர்ந்த இடமென்று கருதப்பட்டு வந்ததான மகததேசத்து இராஜகிரஹமென்னும் இராஜதானிக்குத் தனது நோக்கத்தைத் திருப்பினான். போதிசத்வன் இராஜ கிரஹத்திற்கு எப்படி வந்தடைந்தா னென்றும், இங்கு இராஜபிம்பிசாரன், இவனிடம் என்ன சம்பாதித்தா னென்றும் விபரித்திருக்கிறது. சுதனிபாதரத்தில் சன்னியாச லக்ஷணங்களை சம்பூர்ணமாகக் கொண்ட போதிசத்வனைப் பார்த்து பிம்பிசாரன் "யானை வீரனுக்கு அடுத்தாற்போ லுள்ள மகாவீரன் போன்று நீர் நம்மிடம் இருப்பீராக. உமக்கு வேண்டிய பொருளனைத்தும் கொடுப்போம். அவைகளை இஷ்டப்படி செல விடலாம். நீர் யார்? உம்முடைய குலம் யாது? இவைகளை நீர் எமக்குச் சொல்லும்" என்று வினவினன். இதற்குப் போதிசத்வன், "ஏ! இராஜனே! இந்த நாட்டின் வடக்கு திக்கிலுள்ள கோசல தேசத்தில் தனதான்னியங்கள் முதலான சம்பத்துகள் நிறையப் பெற்ற ஐஸ்வரிய சம்பன்னர்களாக சாக்கிய சாதியர் இருக்கிறார்கள். நான் சாதியில் சாக்கியன். எனது கோத்திரம் ஆதித்தியம். இத்தகைய சம்பத்துக்களை வெறுத்தவனாக நான் பரிவிராஜ னானேன். எந்த சம்பத்

தின் குறைவாலு மன்று. காம உபபோகங்களி னின்று எனது மனது அகன்றுவிட்டது. தனித்த நிலேயே எனக்கு இன்பம் தருவ தாயிற்று. ஆனதிஞல் தபசுகள் செய்வான் வேண்டிப் புறப்பட்டவ ஞகிறேன். இது வொன்றுதான் எனது மனேபீஷ்டம்" என்று விடை அளித்தனன்.

போதிசத்வன் ஆலார காலாமனின் கொள்கை பூர்ண மான தென்று காணப்படாததால், முற்றிலும் சாந்தியைத் தந்து சுகத்தையே நிலே நிறுத்துவதான மார்க்க மொன்றைக் கண்டு பிடிப்பதற்காக வென்றே ராஜ கிரஹத்து வந்தான். இங்கு அநேகமான சிரமணர்கள் பல விதமான தபசுகளே அனுஷ்டிப்பது பார்த்து இந்த மார்க்கத்தில் செல்லுமிடத்து எனது நோக்கம் கை கூடுமென்று நினேத்ததால் தானும் தவம் புரிய வேண்டு மென்று நிச்சயித்தான். இதற்காக வென்றே இங்கிருந்து 'உருவிலர்' பிரயாணமாகி அங்கு தபசையும் ஆரம்பித்தான் என்று 'அரிய பரியேசனத்தில்' கூட எழுதி யிருக்கிறது.

உறை விடத்தைப் பற்றிய இவனது உத்தேசம் இங்கு ஒதுங்கினது போலும். பகவான் புத்தன் "பிக்ஷுக்களே! சர்வ கல்யாண ஞானத்தைப் பெறுவதற்கான தபசைப் புரிவதற்கு நிர்மலமான இடம் கிடைக்க வேண்டு மென்று பல திசைகளிலும் நான் அலேந்து திரிந்தேன். முடிவில், உரி வேளுக்கு வந்தேன். இதில் மிகவும் மனேரம்யமானதோர் இடம் எனது பார்வையைக் கவர்ந்தது. மிகவும் அற்புத மான அழகிய வனத்தினிடை ஓர் உயிர்ப்புனல் மெதுவாகப் போகிக்கொண்டிருந்தது. இந்நதியின் இரு கரைகளிலும் பரிசுத்தமான வெண் மணல் பரவி யிருந்தது. தண்ணீர் அதிக ஆழ மில்லாததால் விநோதமாக அங்கு மிங்கு முலாவு தற்குத் தகுதியாக இருந்தது. அவ்விடம் நதியின் எல்லாப் பக்கங்களிலும் சிறு கிராமங்கள் அமைந்திருந்ததிஞல், பிக்ஷாடனத்திற்கும் உத்தமமான அனுகூலங்கள் இருந்தன. இவைகளேக் கண்ணுற்ற எனக்கு ஆனந்தம்பெருகியது. நல்ல சீலமுடைய ஒருவனுக்குத் தபசுக்காக இந்த இடம் மிகவும் நேர்த்தியான தென்றே நிச்சயம் செய்தேன். இதன் கண்ணே நானும் தபசை ஆரம்பித்தேன்.

தபசின் விதம். போதிசத்வன் எவ்விதங்களில் தபசு செய்தனனே அவைகளேக் குறித்துப் பல வரலாறு பௌத்த

கிரந்தங்களில் காணப்படுகின்றன. இவைகளை ஒருவாறு நோக்கு மிடத்து, யாதா மொருவன் ஒரு ஜன்மத்தின் வாழ் நாள் அளவிலே, குறிப்பிட்ட தபசின் விதங்களை யெல்லாம் நோற்க முடியு மென்று கருதுவது கடினம். போதிசத்வன் எந்தத் தபசுகளை அனுஷ்டித்தான் என்று தீர்மானஞ் சொல்லுவதற்குப் பதிலாக எந்த எந்தத் தபோ முறைகள் அக்காலத்தில் வழிபாட்டி லிருந்தனவோ அவைகளில் சில வற்றை உதார ணார்த்தமாக எடுத்து விபரிப்பது திருப்தி கரமாகக் காண்கின்றது. பகவான் புத்தன் எல்லா புத்தர் களுக்கும் உபதேசித்த தபசின் விபாத்தைச் சுருக்கமாகக் கூறுவாம் :—

"ஓ புத்தர்களே! நான் நான்கு பிரகாரத்தில் தபசை அனுஷ்டித்ததாக எனக்கு ஞாபகத்தி லிருக்கிறது. நான் முதலில் சாதாரண தபசியாக இருந்தேன். சில காலத் திற்கு பின் "ஜுகுப்சித்" என்ற நிலையைச் சுவீகரித்தேன், முடிவில் "பிரவி விக்த" னானேன். திகம்பர விருத்தியே என்னால் அனுசரிக்கப்பட்டது. லௌகீக அனுஷ்டானத் துக் குரிய கட்டுகளைக் கண்ட அளவில் நான் முறையே ஒவ் வொன்றையும் கை விட்டேன். கை யேந்தி வாங்கின உண வையே நான் உண்டு வந்தேன். மீனாவது மாமிசமாவது, கள்ளாவது கலந்த உணவை உட்கொள்வ தில்லை. என்னை அழைத்துக்கொடுக்கும் அன்னத்தையாவது, சத்திரங்களில் சமைக்கப் பட்டவைகளையாவது, கர்ப்பிணிகளால் அல்லது இடுப்பில் குழந்தையை ஏந்திக்கொண்டு வந்தவர்களால் கொண்டுவரப்பட்ட ஆகாரத்தையாவது நான் ஏற்பதில்லை. நாயாவது ஈக்களாவது தொட்டு அசுத்தப் படுத்திய சோற் றைச் சாப்பிடுவது மில்லை. புல், இலை, கீரை, காய், கனி, சாமை, தினை, தவிடு, பொறி, புண்ணாக்கு, கோமயம், சக் கிலியன் வெட்டிப் போட்டதான தோற்றுண்டுகள் இவை களைக் கொண்டும் நான் ஜீவாதாரம் செய்துவந்தேன்."

"முதல் தினத்தில் ஒரு பிடி அல்லது காண்டி யளவு அன்னம் அல்லது ஒரு இலந்தைப் பழம் அல்லது பாசிப் பயற்றில் ஒன்று, மறுதினம் இரண்டு மடங்கு, மூன்றாம் தினம் மூன்று மடங்கு, இவ்விதமாக ஏழுநாள் வரை அதிகப் படுத்திக் கொண்டே வந்து, திரும்பவும், இதே யளவில் குறைத்துக்கொண்டுவந்து, பின்னர் இந்த ரீதியாக நாடுவா

ரும் விரதத்தை அனுஷ்டித்தேன். இதனால் எனது சரீரத்து மாம்சமெல்லாம் குன்றிப்போய்க் கடைசியில் எனது உடலோர் தனித்த எலும்புக் கூடாயிற்று. எனது தோல் வாட்டிக் குன்றியதால் நெருப்பின் மீது வெண்ணீர் படிந்தது போல் தென்பட்டது. வயிற்றுக்குள் கையினால் அழுத்துமிடத்து முதுகுப் புறத்து எலும்புக் கூடுகள் உணரப் பெறுமளவு மெலிந்தேன். பாழடைந்த ஆழமான கிணற்றில் வற்றிய தண்ணீர் மீது வான்மீன் தோன்றுவது போல எனது வாடிய சரீரத்துக் குழிந்த முகத்திடை நேத்திரங்களின் நிலை புலன்பட்டது."

"மல மூத்திர விசர் ஜனத்திற்காக எழுந்து உட்காரும் படியான சாமர்த்தியங்கூட சரீரத்தில் இல்லா திருந்ததால், சக்தி யற்ற அந் நிலையின் கிடந்த கிடையிலேயே இவ் வியற்கை நியமங்கள் நிகழ்வது முண்டு. எதா மொரு தோற் பையினுள் எலும்புகள் கட்டி வைக்கப்பட்டதுபோல ஆய் விட்டேன். அடிக்கடி நான் எனது ஞாபக சக்தியையும் பலிதான மாகக் கொடுப்பது முண்டு. பல சமயங்களில் குதிரை ரோமங்களால் செய்யப்பட்ட அல்லது பறவையின் இறகுகளால் தைக்கப்பட்டது அல்லது தருப்பைப் புல்லால் பின்னப்பட்ட அல்லது மிருகங்களின் தோலா லாக்கப்பட்டது மான ஆடையைத் தரிப்ப துண்டு. இங்ஙனம் வெவ்வேறான சரீர தண்டனையை இயற்றி அவைகளை சகித்தும் வந்தேன். இவைகள் தாம் எனது தபசு.

"ஓ! புத்தர்களே இனி எனது இக்ஷதையின் விபரத்தைக் கேளுங்கள். பல்லாண்டுகளாகப் படிந்துள்ள புழுதிகள் எனது தேகத்தின்மீது பாவியிருந்தன. ஒரு பழைய மரக்கட்டையின் மீது வெகு காலமாகப் புழுதி படிந்திருந்ததை ஒத்திருந்தது எனது சரீரத் தோற்றம்—ஆயினும் இவ் அழுக்கைக் கழுவி அகற்றுவதற்குப் பிறராவது நானாவது முயலவேண்டுமென்று கருதினேனல்லன். இனி எனது ஜுகுப்சையின் விபரத்தைக் கேளுங்கள். நான் மிகவும் பத்திரமான நினைவோடு நடமாடுவேன். தண்ணீர்த் திவலையிலும் மிகுந்த இரக்க நிறைந்த பார்வையோடு பார்ப்பேன். ஒரு சிறு கிருமி கூட என் கைப்பட சாகக் கூடாத படிக்கான சாக்கிரதையை நோன்பெனக் கொண்டு செலுத்தி வந்தேன்."

"எனது தனிமையின் தன்மையை உங்களுக்குச் சிறிது மாத்திரம் விளங்கச் சொல்லுவேன். நான் நெருங்கியதோர் ஆரண்ணியத்துக்குட் சென்று வசிப்பது வழக்கம். மாடு மேய்ப்பவர்களாவது, விறகு வெட்டுகிறவர்களாவது, மற்றும் யாராவது இவ்வழி வருகிற சந்தடி கேட்டால் ஓலமிட்டு அவர்களை விலகச் செய்து நானும் மறைவிடத்தில் மறைந்து கொள்வேன்."

"சில வேளைகளில் நான் பசுவின் சாணியைத் தின்று கொண்டு வசிப்பேன். எனது மல மூத்திரங்களைத் தின்று கொண்டு சில தினங்களைக் கழித்தேன். இந்தக் கெட்ட ரீதியில் எனது ஆகார மிருந்தது. அயர்ந்த வனப் பிரதேசத்தில் நான் இருப்பிடம் வைத்துக் கொண்டேன். பனி காலத்தில் வெளிப்புறத்தே விழுந்து கிடப்பேன். சில சமயம் சுடுகாட்டில் பிரேதத்தின் எலும்புகளைத் தலையணையாகக் கொண்டு நித்திரை செய்வேன். ஜனங்கள் என் மீது வெறுத்துத் துப்புவார்களாயினும், கவனியாது மல மூத்திர விசர்ஜனம் செய்வேன். காதில் சிறு குச்சியை விடுவார்கள். இதைக் குறித்து இவர்கள்மீது லவலேசமேனும் வெறுப்புடன் நோக்காதிருக்கும்படிக்கு நான் எனது மனதைத் தக்க நிலையில் வைத்து வருவேன்."

இவ்விதமாகப் பகை, கொடுமை, பயங்கரமான தோற்றம், அச்சம், வெறுப்பு, உறவு, உறவின்மை முதலாய முறையைத் தழுவும் தபசு அக்காலத்தில் வழக்கத்தி லிருந்தன. இப்போதும் கூட இவைகளுள் சில தனிப்பட்ட சில பந்தியாருள்ளும் காண்பதாகும். இரும்பு முட்களை ஊன்றி அதன்மீது சயனிப்பதும், கூர்மையான சிலர் கைகளால் செய்த பாதக்கொறடு மீது நடத்தலும், நல்ல பனி காலத்தில் இடுப்பளவு தண்ணீருள் நிற்பதுவும், வெயிலின் வெப்பத்தால் மிகக் காய்ந்த கற்பாறை மீது இருந்து கொண்டு தபசு செய்வதும், பஞ்சாக்கினி மத்தியி லிருத்தலும், சுடு காட்டிடை வசிப்பதும், தலை மயிர்களை மழுங்கப் பிடுங்கிக் களைவதும் உபவாசம், சாந்திராயண விரதம், இவைகள் போன்ற அனுஷ்டானங்கள் அங்கு மிங்கும் அனுசரித்து வருவதைப் பார்க்கலாம்.

ஒருவன் விஷ்டையையும், வாந்தி செய்தவைகளையும் உட்கொள்வதற் குரிய உதாரணங்கள் அகோர பந்தனிடத்

தும், டோஸிபோட் சாதியானிடத்தும், மிருதியும் மாமூலில் நிகழ்வதை நேரிற் பார்க்கலாம். தற்காலத்தில் தோன்றுவதான தபோ முறைகளில் புலவும், பாரம்பரையில் 2500, வருடத்திற்கு முன்னதாகவே சாதாரணமாக நடைபெற்று வருவதாகத் தெரிய வரும்.

சரீர தண்டனையின் பயனின்மை. இந்தப் பிரகாரமான மெய் வருத்தத்துள் போதி சத்துவனுக்கு உபவாசத்தின் கண்ணே அதிகமான விஸ்வாச மிருந்ததென 'அரிய பரியேசன'மிலும் மற்றுமுள்ள பௌத்த புத்தகங்களிலும் காணப்படுகிறது. ஆனல் இவைகள் ஒன்றினின்றும் போதி சத்தனுக்கு சாந்தி சுகத்தின் ஆனந்தம் சித்திக்க வில்லை. இவ்வித ஸ்ரமண பந்ததியில் நிர்வாண பதவியை ஒருபோதும் அடைவது அசாத்திய மென்று பூர்த்தியான நம்பிக்கை வந்தபோது, தான் தனது இளம்பருவத்தில் நாவல் மரத்து சாயலில் வீற்றிருந்து கொண்டு பயின்று வந்ததான ஞான மார்க்கத்தில் ஞாபகம் தன்னிச்சையாய் போதி சத்தனுக்கு ஏற்பட்டது.

பகவான் புத்தன் அக்கிடுவசையிடம் கூறுகிறுன். எனது பிதாவின் கழனியில் கலப்பை கொண்டு உழுவது போன்ற காரியங்கள் நிகழுங்கால் நான் நாவல் நிழலில் தியான நிமக்னனுய் கவலை யற்றிருந்த காலம் இப்போது எனது கருத்திடை நல்ல வண்ணம் காண்கின்றது. அந்த தியான நிலையின் ஆனந்தத்தைப் பற்றிய நினைவுக் கதிர் சித்த மென்னு வானிடை பிரகாசித்த அளவிலேயே சம்பூரண ஞான மார்க்கத்தின் போதம் என்னுட் தோன்றி மறைந்தது" மகா பாகத்தின் ஆத்தியாத்மிக் நிகழ்ச்சிக்குரிய விருத்தாந்தத்தில் இதுவோர் அற்புதமான சந்தியேயாகும்.

ஸ்ரமண சன்னியாசத்திடை வழக்கத்திலுள்ள தேக தண்டனையின் முறையானது கடுமையான தியாக மார்க்கத்துக் குரிய நிர்வாண நிலையை அடைவதான நோக்கத்தின் முன் பொருள் படா தென்று தோன்றியதால் போதி சத்தனுக்கு ஆகார கால மென்று உபதேசித்த தான சமாதி மார்க்கம் தென்படாது, பால பிராயத்தில் தனது மனதைப் பற்றிய தியான மார்க்கத்தினிடை பரிந்தேறுவதின் தத்துவம் படாதென்று தெரிந்து கொள்வது இவ

னது முக்கிய நோக்கமா யிருந்த தெனத் தெளிவாக இங்கு நாம் அறிகிறோம். சம்சார சாகரத்திடை வீழ்ந்து தத்தளிக்கும் ஜனங்களைக் கண்ணுற்று பகவான் புத்தனின் அந்தக் காரணம் மிக இளகியதா யிருந்தது. இந்திரிய சுகங்கள் சத்தியமல்ல வென்றும் நித்தியமல்ல வென்றும் இவன் இயற்கையில் நன்கு அறிந்தவனா யிருந்தான்.

பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்.

(மணிமேகலை)

வியாதி சுகங்கள் அதாவது நன்மையைத் தரத் தக்க வஸ்துக்களில் சார்ந்திருப்பதான சுகங்கள் மீது வெறுப்புற்றிருப்பதிலில் மாத்திரமே அவன் தங்கி நிற்பவனா யில்லை. அன்பு, விஸ்வாசம், கருணை, தயை முதலான இனிய பாவனைகளால் உண்டாகும் நேர்மையும் சாஸ்வதமுமான நலங்களால் முடிவித்த நிலைக்கோர் மார்க்கம் கண்டு பிடிப்பவனாயினன். காம மோக மத மாற்சரியம் முதலானவைகளை வளம்பெற வளர்க்கும் விஷங்களாகிய விஷவல்லிக்கு வித்தாகி அதனை மருவுவதற் குரிய சுபாவத்தை அடக்கி, சுகத்தைத் தராத பாவனைகளும் எண்ணங்களும் ஒருங்கே நசுக்கும்படி செய்து, நன்னோக்கம் நல்வார்த்தை நற்செயலாகிய மனோகர மலர்க்கொடிகள் சூழ்ந்து பிரகாசிக்க வேண்டிய மனக் கமலங்களுக்கு நிர்வாண மென்னுமோர் ஓர் தூபம் பொய்கை பற்றிய கால்வாய்களைக் கொண்டு வளம் பெறும் தத்துவ போத மென்னும் தண்ணீர் பாய்ச்சுவானானன் பகவான் புத்தன்.

லக்ஷ்மி பைண்ட் வால்யம்

லக்ஷ்மி ஆரம்ப வருஷம் 12 சஞ்சிகைகளும் சேர்த்து பைண்டு செய்தது. விலை ரூ. 3 0 0

லக்ஷ்மி மூன்றும் வருஷத்து 12 சஞ்சிகைகளும் சேர்த்து பைண்டு செய்தது. விலை ரூ. 3 0 0

லக்ஷ்மி ஆபீஸ்,
தபால் பெட்டி 99, சென்னை.

திவான்பகதூர்.

R. N. ஆரோக்கியசாமி முதலியார்

நமது ராஜதானி
புதிய மந்திரிகள்

முதன் மந்திரியான டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஒரு பாரிஸ்டர். குமாரமங்கலம் ஜமீன்தார். கவுண்டர் என்ற பட்டம் பெற்ற கொங்கு நாட்டு வேளாளர். ஓர் பிராமண ஸ்திரீயை விவாகஞ் செய்துள்ளார். வயது 37.

* * * * *

ஆற்காடு ரங்கநாத முதலியார் அவர்கள் பிரமஞான சங்கத்தின் ஒரு முக்கிய அங்கத்தினர். தெலுங்கு ஜில்லாக்களில் டிப்டிகலெக்டராக இருந்து ராஜிநாமா செய்தவர். இதுவரை உத்தியோகத்தி லிருந்திருந்தால் ஜில்லா கலெக்டராக இருப்பார். ஏழைகளிடம் அன்பும், தயையும் உடையவர். தருமம் செய்யக்கூடியவர். இவருக்கு வயது 47.

* * * * *

திவான்பகதூர் ஆர். என். ஆரோக்கியசாமி முதலியார் ரோமன் கத்தோலிக் கிருஸ்தவர். சூப்பரின்டெண்டிங் இஞ்சினீயர் உத்தியோகத்தை வகித்திருந்து சிறியது காலத்துக்கு முன் தான் பென்ஷன் பெற்றவர். சென்னை, ராயபுரத்தில் பிறந்தவர். இவருக்கு இப்பொழுது வயது 56.

"லக்ஷ்மி" பஞ்சாங்கம்

அக்ஷயவூ மார்கழி–தைமீ, சாலிவாகன 1849,
கலியுகாதி 5028, பசலி 1336, கோல்லம் 1102, ஹிஜரா 1345,
இங்கிலீஷ் 1927வூ ஜனவரிமீ

ஜனவரி	மார்கழி தை	வாரம்	திதி	நக்ஷத்திரம்	யோகம்	விசேஷங்கள்
1	17	சனி	திர 54-38	அனு22-23	சித் 60	யாத்திரை செய்ய [செய்ய
2	18	ஞா	சது 52-5	கே 22-10	மர 22 அ	மகா சிவராத்திரி ஜபம்
3	19	திங்	● 48-25	மூல 20-33	சித் 20 மர	அமாவாசை விரதம்
4	20	செ	பிர 46-18	பூரா17-43	சித் 17 அ	புஷய சுத்தம் [சனம்
5	21	புத	து தி37-25	உத் 13-55	அ 13 சி	பூ முடித்தல் சந்திர தரி
6	22	வி	திரி 31-8	திரு 9-33	சித் 60	விதை விதைக்க [மேற
7	23	வெ	சது 22-5	அவி 4-48 சத 59-58	சித் 60	சதுரத்தி விரதம் வாகன
8	24	சனி	பஞ் 18-13	பூர 55-30	மர 60	எதிரியைவெல்ல விவகாரம்
9	25	ஞா	சஷ் 20-5	உத் 58-33	அமி 60	சஷ்டி விரதம் [வைக்கக
10	26	திங்	சப் 6-35	ரே 48-10	சித் 60	இராஜதரிசனம் மாடுவாங்க
11	27	செ	அஷ் 1-45 நவ 57-43	அசு 45-35	சித் 60	வங்காயம் நட
12	28	புத	தச 54-25	பர 43-48	சித் 43 அ	தங்க பாத்திரம்[பண்டிகை
13	29	வி	ஏகா 52-8	*கி 42-55	மர 60	கார்த்திகை விரதம் வை குண்ட ஏகாதசி போகி
14	1	வெ	து 50-58	ரோ 43-3	மர 43 சி	கரிநாள் பொங்கல்
15	2	சனி	திர 50-43	மிரு 44-8	சித் 60	கரிநாள் மாட்டுப்பொங்கல்
16	தைமீ 3	ஞா	சது 51-28	திரு 46-18	சித் 60	கரிநாள் கண் பொங்கல்
17	4	திங்	○ 53-15	புன 59-28	அ 49 சி	பௌர்ணமி கோடியுடுக்க
18	5	செ	பிர 56-18	பூச 53-35	சித் 60	தைபூசம் விசேஷ தினம்
19	6	புத	துதி 60	ஆயி 58-50	சித் 60	வித்தியாப்பியாசம்
20	7	வி	துதி 0-20	மக 60	அமி 60	வாழை நட கரும்பு நட
21	8	வெ	திரு 5-25	மக 5-0	மர 5-0 சி	சவுத்திவிரதம் ஆயுதங்கள்
22	9	சனி	சது 9-8	பூர 11-58	சித் 11 மர	யாத்திரையை விலக்க
23	10	ஞா	பஞ் 17-30	உத் 19-23	அமி 60	சஷ்டி விரதம்
24	11	திங்	சஷ் 23-50	அஸ்26-43	சித் 26 மர	கரிநாள் சுபம் விலக்க
25	12	செ	சப் 29-40	சித் 33-38	சித் 60	நாற்கால் ஜீவன் வாங்க
26	13	புத	அ 34-40	சுவா39-33	சித் 60	கோடி யுடுக்க [வைக்க
27	14	வி	நவ 37-50	விசா 44-3	சித் 60	தானயங்கள் இருப்பு
28	15	வெ	தச 39-20	அனு-4645	சித் 46 மர	ஷேகம் சுபம்
29	16	சனி	ஏகா 38-55	கே 47-38	சித் 60	சர்வமத்வ ஏகாதசி
30	17	ஞா	து 36-33	மூல 46-25	அ 46 சி	கரிநாள் [திருதத்
31	18	திங்	திரி 32-20	பூரா 43-33	மர 60 மீ	மகா சிவராத்திரி சீர்

சித்தர்கள் ஓரை சாஸ்திரம்.

(ஜோசியர் குப்புசாமி முதலியார் எழுதியது)

திங்கள்		செவ்வாய்		புதன்		வியாழன்		வெள்ளி		சனி		ஞாயிறு	
காலை		காலை		காலை		காலை		காலை		காலை		காலை	
6-7	சந்	6-7	செவ்	6-7	புத	6-7	குரு	6-7	சுக்	6-7	சனி	6-7	சூரி
7-8	சனி	7-8	சூரி	7-8	சந்	7-8	செவ்	7-8	புத	7-8	குரு	7-8	சுக்
8-9	குரு	8-9	சுக்	8-9	சனி	8-9	சூரி	8-9	சந்	8-9	செவ்	8-9	புத
9-10	செ	9-10	புத	9-10	குரு	9-10	சுக்	9-10	சனி	9-10	சூரி	9-10	சந்
10-11	சூரி	10-11	சந்	10-11	செவ்	10-11	புத	10-11	குரு	10-11	சுக்	10-11	சனி
11-12	சுக்	11-12	சனி	11-12	சூரி	11-12	சந்	11-12	செவ்	11-12	புத	11-12	குரு
12-1	புத	12-1	குரு	12-1	சுக்	12-1	சனி	12-1	சூரி	12-1	சந்	12-1	செவ்
பகல்		பகல்		பகல்		பகல்		பகல்		பகல்		பகல்	
1-2	சந்	1-2	செவ்	1-2	புத	1-2	குரு	1-2	சுக்	1-2	சனி	1-2	சூரி
2-3	சனி	2-3	சூரி	2-3	சந்	2-3	செவ்	2-3	புத	2-3	குரு	2-3	சுக்
3-4	குரு	3-4	சுக்	3-4	சனி	3-4	சூரி	3-4	சந்	3-4	செவ்	3-4	புத
4-5	செ	4-5	புத	4-5	குரு	4-5	சுக்	4-5	சனி	4-5	சூரி	4-5	சந்
5-6	சூரி	5-6	சந்	5-6	செவ்	5-6	புத	5-6	குரு	5-6	சுக்	5-6	சனி
இரவு		இரவு		இரவு		இரவு		இரவு		இரவு		இரவு	
6-7	சு	6-7	சனி	6-7	சூரி	6-7	செவ்	6-7	செவ்	6-7	புத	6-7	குரு
7-8	புத	7-8	குரு	7-8	சுக்	7-8	சூரி	7-8	சூரி	7-8	சந்	7-8	செவ்
8-9	சந்	8-9	செவ்	8-9	புத	8-9	சுக்	8-9	சுக்	8-9	சனி	8-9	சூரி
9-10	சனி	9-10	சூரி	9-10	சந்	9-10	புத	9-10	புத	9-10	குரு	9-10	சுக்
10-11	குரு	10-11	சுக்	10-11	சனி	10-11	சந்	10-11	சந்	10-11	செவ்	10-11	புத
11-12	செ	11-12	புத	11-12	குரு	11-12	சனி	11-12	சனி	11-12	சூரி	11-12	சந்

1. குறிப்பு:—சூரியன் ஓரை கெட்டது, செவ்வாய் ஓரை கெட்டது, சனி ஓரை கெட்டது, இந்த 3 ஓரைகள் நடக்கும் மணி வரையில் எந்த சுபகாரியங்களும் செய்யக்கூடாது செய்தாலும் முடியாது. தடைபடும்.

2. மற்ற சந்திரன், புதன், குரு, சுக்கிரன் இந்த நான்கு ஓரைகள் நடக்கும் மணி 1-க்குள் எந்த சுபகாரியங்களை ஆரம்பித்தாலும், வழி நடந்து போனாலும் கைகூடுவதோடு அன்றி சந்தோஷம் உண்டாகு மென்பதற்கு யாதொரு சந்தேகமும் கிடையாது. சகல நண்பர்களும் லக்ஷ்மி கடாக்ஷம் பெற்று தங்கள் தங்கள் காரியங்களை ஜெயம் பெறலாம். சுப மஸ்து.

பல சில குறிப்புகள்

சென்னை புஸ்தக வியாபாரிகளான C. குமாரசாமி நாயுடு அன் சன்ஸ் வெளியிட்ட டைரி ஒன்று வரப் பெற்றோம். இந்த டைரி ஜனங்களுக்கு மிகவும் உபயோகமான தொன்றே.

இதன் விலை அணு 12.

"இந்து நேசன்" வருஷ அனுபந்தம் எமக்கு கிடைத்தது. இதில் பல அரிய பெரிய விஷயங்கள் மாதர்களாலும், மற்றும் கல்விமான்களாலும், இங்கிலீஷிலும் தமிழிலும் எழுதப்பட்டிருக்கின்றன. அழகிய ஆர்ட் பேப்பரில் பல படங்களுடன் பிரிண்ட் செய்திருக்கின்றன. ஜனங்களுக்கு மிகுந்த நன்மையை அளிக்குமென்றே கூறலாம். இதன் விலை ரூ. 1—0—0 வேண்டுவோர் "இந்துநேசன்" ஆபீஸ், 65, அர்மீனியன் தேரு, சென்னை. என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

நீதிவாக்கிய மஞ்சரி :—இப் புஸ்தகம் சென்னையில் புஸ்தக வியாபாரியான ஸ்ரீசாது ரத்தின சற்குரு புஸ்தக சாலையாரால் எமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. இதில் 208 நீதி விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. இந் நீதி விஷயங்களை ஆண்களும் பெண்களும் படித்தால் தீய வொழுக்கத்தை ஒழித்து நல் வழியில் திரும்புவார்கள். இதன் விலை அணு 4. இப் புஸ்தகம் எமது லக்ஷ்மி புஸ்தகசாலையில் கிடைக்கும்.

கலியுக புளுகன் :—இப் புஸ்தகம் ஷெயாரால் எமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. இது படிப்பதற்கு வேடிக்கையாய் இருந்தாலும், விளையாட்டுக்கும் மற்றும் எக்காரணம் கொண்டும் பொய் சொல்லுதல் கூடாது; அப்படிச் சொல்லின் பொய் சொல்லியவருக்கே கெடுதல்கள் பலவும் சேர்ந்து சீரழிக்கும் என்பன போன்ற பல நீதிகளை புகட்டிக் காட்டக்கூடியது. இதன் விலை அணு 8. இப் புஸ்தகம் எமது லக்ஷ்மி புஸ்தகசாலையில் கிடைக்கும்.

தென்னிந்தியாவிலுள்ள கோவிற் கோபுரங்களில் திருநெல்வேலி ஜில்லா, களக்காடு என்னும் ஊரிலுள்ள கோவிலின் கோபுரம் மிகவும் பெரிதென்றும் பற்பல சிற்ப வேலைகள் அடங்கியிருக்கின்றது என்றும் சொல்லப்படுகிறது.

சில வாரங்களுக்கு முன்பு சென்னை கவர்னரின் இளைய மகளான சிசிலி கோஷனுக்கும் காப்டன் போர்ட்டலுக்கும் நடந்த கலியாணத்தில் பிள்ளைக்கும் பெண்ணுக்கும் பரிசாக வந்த பல பொருள்களின் மதிப்பு சுமார் ஒன்றரை லட்ச ரூபாயாம்.

பல சில குறிப்புகள்

ஸ்பெயின் தேசத்தில் 400 அடி உயரமுள்ள உப்பு மலைகள் இருக்கின்றன.

சென்ற வாரத்தில் இங்கிலாந்து தேசமெங்கும் பெரு மழையும் புயற் காற்றும் அடித்து மிகுந்த கஷ்டம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

ஜப்பான் சக்ரவர்த்தி மிகவும் சுகவீனமா யிருப்பதால் நாடெங்கும் கோவில்களில் விசேஷ பிரார்த்தனை செய்கிறார்கள்.

ஜெர்மனியின் தலை நகரான பெர்லினில் டாக்டர் கார்ல் முல்லர் என்பவர் மெல்லிய கண்ணாடி போன்று தெளிவான இரும்பை உற்பத்தி செய்திருக்கிறாராம்.

ஜப்பான் பாஷையானது தென் இந்தியாவில் வழங்கும் திராவிட பாஷையிலிருந்து தோன்றியது என்று புங்கி உத்தமர் ஜப்பான் பாஷையைப் பற்றிய ஒரு கட்டுரையில் கூறுகிறார்.

சென்ற ஆண்டு நவம்பர் முதல் இந்த ஆண்டு நவம்பர் வரை கானடா தேசத்தில் ஒரு கோழி 348-முட்டைகள் இட்டதாம். இது தான் பூலோகத்தில் அதிக முட்டை யிட்ட கோழியாம்.

கவிராயர் ரவீந்திரநாத் தாகூரின் கொள்கைகளை விவரித்து ஸ்ரீமான் ஆண்டரூஸ் தர்பான் நகர மண்டபத்தில் சென்ற மாதத்தில் ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மெக்ஸிகோ தேசத்தில் வளரும் 'மகுவி' என்னும் மரத்தின் பட்டையிலிருந்து உண்டாக்கப்படும் நூல் பருத்தி நூலைவிட மூன்று மடங்கு கெட்டி யானதாம்.

அமெரிக்காவில் ஒருவருக்கு இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பிறக்காதிருக்க வேண்டுமென்று அதற்குரிய வழியைப் பற்றிச் சில அறிஞர்கள் சிந்தித்துக்கொண் டிருக்கிறார்களாம். அதிகப் பிள்ளைகள் பெற்றால் பெண்களுக்கு உடல் நலம் கெட்டு விடுவதுடன் அப் பிள்ளைகளை ஆதரிக்கவும் முடியவில்லையாம்.

மைசூர் சிமோகாப் பகுதியில் உள்ள காட்டில் ஒரு இடைப் பையன் நூறு மாடுகளை மேய்த்துக்கொண் டிருக்கும் பொழுது ஒரு புலி வந்து அவனைத் தாக்கியது. பையன் அஞ்சி நடுங்கிக் குப்புறப் படுத்துக்கொண்டான். மாடுகளெல்லாம் ஓடிவந்து ஒன்று சேர்ந்து புலியைக் கொம்புகளால் நாலா பக்கங்களிலும் குத்தி வீழ்த்தி விட்டன. பாதி உயிரிழந்த புலி ஓடிவிட்டது. பையன் வைத்திய சாலையில் குணமடைந்து வருகின்றான். மாடுகளின் வீரத்தைப் பாட வேண்டும்.

பல சில குறிப்புகள்

ஐதராபாத் உஸ்மானியா வைத்திய சாலையிலுள்ள சின்னய்யா என்ற பதின்மூன்று வயதுள்ள வண்ணாரச் சிறுவனுக்கு உடம்பிலுள்ள அவயவங்கள் நிலைமாறி யிருக்கின்றனவாம். எல்லோருக்கும் இருதயம் இடப்பாகத்திலே இருக்க அவனுக்கு இருதயம் வலப் பாகத்தில் இருக்கிறது. வலது பக்கத்தில் இருக்க வேண்டிய ஈரல் இடது பக்கத்தில் இருக்கிறது. வயிறோ தலை கீழா யிருக்கிறதாம். ஆயினும் பையன் சௌக்கியமாக எல்லோரையும் போலவே யிருக்கிறான். கர்ப்பத்திலேயே ஏதோ கோளாறினால் அவனுக்கு அவயவங்கள் புரண்டு போயிருக்கின்றன வென்று சொல்லுகிறார்கள்.

கன்னய்யா நாடகக் கம்பெனியார் சென்னையில் நவம்பர் மீ 22உ மாலை திரு. எஸ். சீனிவாசய்யங்கார் முன்னிலையில் தசாவதார நாடகம் நடத்தி, அவருக்கும் மற்றுமுள்ள காங்கிரஸ் தலைவர்களுக்கும் மாலை தரிப்பித்து, கதர் வாங்கி ஏழைகளுக்கும் தாழ்ந்த வகுப்பாருக்கும் அளிப்பதற்காக, திரு. எஸ். சீனிவாசய்யங்காரிடம் 1,000 ரூபா பணமும் அளித்தார்களாம்.

துளசியின் மகிமை:—சென்னையில் கப்பல்கம்பெனி புரோக்கரான சாதத் தம்பி மரைக்காயர் என்பவர் சென்ற மாத இறுதியில் ஒரு வியாபாரியான நண்பருடன் காஞ்சிபுரத்தை அடுத்த பிள்ளைச் சத்திரம் காடுகளில் வேட்டையாடப் போனார். மரைக்காயர் தமது மோட்டார் வண்டியை ஓர் இடத்தில் விட்டு விட்டுப் பறவைகளைச் சுட்டுக்கொண் டிருந்தபொழுது குண்டுச் சத்தம் கேட்ட ஒரு நாகப்பாம்பு கோபத்துடன் வந்து மரைக்காயரின் இடது கணைக்காலில் கடித்துவிட்டது. உடனே சமீபத்திலிருந்த அவர் நண்பரும் வண்டிக்காரனும் வந்து சிகிச்சை செய்துகொண் டிருந்த பொழுது திரும்பவும் அந்தப் பாம்பு அவர்மீது பாய்ந்தது விஷம் ஏறியதால் மயக்கமாயிருந்தும் அவர் உடனே எழுந்து தமது இரட்டைக் குழாய்த் துப்பாக்கியால் அதனை சுட்டு வீழ்த்தினார். பின்னர் அவர் சமீபத்திலிருந்த கிராமத்து விவசாயிகள் யோசனைப்படி ஒரு கிழவனிடம் மந்திரம் செய்து கொண்டதுடன், அவர் துளசியை அதிகமாகத் தின்றார். அதனால் அவர் முற்றிலும் குணமடைந்தார். மரைக்காயரின் துணிவும் துளசியின் பெருமையும் போற்றத்தக்கவை.

சிகாகோ நகரைச்சேர்ந்த டாக்டர் பி. கே. ரோயஸ்ட் (பி. எச். டி.) என்பார் சென்னைக்கு வந்திருக்கிறார். அவர் திருவல்லிக்கேணியில் ஆசிரியர் அரங்கராதம் என்பார் தலைமையில் ஒரு பிரசங்கம் செய்தார். தாம் இந்தியாவின் நண்பர் என்றும், ஹிந்து மதத்தில் பற்றுள்ளவரென்றும், இந்தியாவைத் தமது வீடாகச் செய்து கொள்வதற்கே வந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

பல சில குறிப்புகள்

திரிச்சூரிலுள்ள கண்காட்சி சாலையில் ஒரு புதுமையான பெரிய ராட்சஸ நல்ல பாம்பைக் கொண்டு வந்து வைத்திருக்கிறார்களாம். இதன் நீளம் எழடி. இதன் படம் மிகவும் அகலமாயிருக்கிறதாம். இது ஒரு நூதனப் பாம்பென்று பாம்புப் பழக்கமுள்ளவர்கள் சொல்லுகிறார்கள்.

லண்டன் நகரிலே, அந் நகரவாசிகள் அணிந்து கொள்ளும் வைக்கோலால் செய்யப்பட்ட தொப்பிகளின்மேல் கடிகாரங்களும் வைக்கப்பட்டுச் செய்யப்பட்டிருக்கின்றனவாம். சாலையில் போய்க் கொண்டிருக்கையில் எவரேனும் ஒருவருக்கு மணி பார்க்க வேண்டியிருந்தால் அவர் உடனே தமது தொப்பியை எடுத்துப் பார்த்தால் மணி தெரியுமாம்.

தென் அமெரிக்கவிலுள்ள பிரேசில் மாகாணத்திலே, குஷ்டரோகத்தைச் சொஸ்தப்படுத்தும் அநேக விருட்சங்களிருக்கின்றனவாம். இவைகளில் ஒன்று குஷ்டரோகத்தை மிக விரைவில் குணப்படுத்தி விடுகிறதாம். இதன் விதைக்குக் "குஷ்டரோக விதை" என்றே பெயராம்.

தென் அமெரிக்காவிலும், குவாகோ என்ற படர் செடியின் இலைகளைத் தின்றாலும் சாறை உட்கொண்டாலும் பாம்பு விஷம் பறந்தோடுகிறதாம்.

ஒரு பட்டுப் பூச்சி கொடுக்கும் பட்டுநூல் ஏறக்குறைய முக்கால் மைல் நீளம் இடையறுமல் நீளுமாம்.

10-வயதுள்ள சிறுவனின் தீரச்செயல்:—பஞ்சாபில் கம்பல்பூர் என்ற விடத்தில் தாஜ்மோஹன் என்ற 10-வயது சிறுவனின் தாயாரும் சகோதரிகள் இருவரும் மலை அருவியில் விழுந்து விட்டார்கள். சகோதரிகளையும் தாயாரையும் காக்கத் துணிந்து ஆற்றில் குதித்துஒரு சகோதரியைக் காப்பாற்றிவிட்டு, மற்றிருவரையும் கரை சேர்க்க முயற்சிக்கையில் இவன்பாடே கஷ்டமாக முடிந்தது. மேலே யிருந்தவர்கள் இவனைக் கரை சேர்த்தனர். இந்த தீரச் செயல் செய்த இளைஞனுக்கு அதிகாரிகள் நற்சாக்ஷி பத்திரமும் பணப்பையும் கொடுத்தனர்.

பிரெஞ்சு சிலாசாசன சங்கத்தார் திரு. பார்டுன் ஜீ. டி. ஜீ. பாரக் என்ற பம்பாய் வாசி "சாசினியன் காயின்ஸ்" என்ற புத்தகம் எழுதினமைக்காக அவருக்கு 12,000 பிராங்குகள் கொடுத்தனராம்.

லண்டனில் நடந்த சினிமா காட்சியொன்றில் ஹாஸ்யம் நிறைந்த காட்சிகளைப் பார்த்து அளவு மீறிச் சிரித்த காரணத்தால் ஜான் பெர்னட் என்னும் 15 வயதுள்ள ஒரு சிறுவன் மரணமடைந்தான்

210364

என் கவலைப்படுகிறீர்கள்!
50-ரூபா முதல் 500-ரூபா வரை
மாதம் சம்பாதிக்கலாம்.

கைத்தொழில் வணிக ரகசியம்

இதில் சோப்புகள், மெழுகுவத்தி, நெருப்புக் குச்சி, பெப்பர்மென்ட். பிஸ்கத்து, கேக்குகள், வாசனை எண்ணைகள், அத்தர்கள் சாம்பிராணி வத்திகள், பன்னீர், சர்பத்துகள், இங்கி, பூட்பாலீஷ், வார்னிஷ், சாயங்கள், பலவித மருந்துகள், காகிதம், பென்சல், முதலியவைகள் செய்யும் முறைகளுடன் 200-பக்கங்கொண்ட பெரிய புஸ்தகம். 1-8-0.

இப்பூவுலக மெங்கனும் புகழ்பெற் றோங்கிய
நமது பி. ஸி. பழனி அண்டு கம்பெனியாரின்
ஸ்பெஷல் பட்டணம் பொடியையும்,
பி. ஸி. பரிமள நஸ்யத்தையும்
ஓர் முறை உபயோகியுங்கள்.

பி. ஸி. பழனி அண்டு கம்பெனியார்,
தபாற் பெட்டி நெ. 230, G. T. மதராஸ்.

---

24 தங்க மெடல்கள் பரிசு பெற்ற

பட்டணம் பொடி.

காரம், மணம், குணம், நிறம், வாடை கமழுகிறது.

N. V. ஷண்முகம் & கோ.,
போஸ்ட் பாக்ஸ் 555,
வண்ணாரப்பேட்டை போஸ்டு, மதராஸ்.

சைவ வைஷ்ணவ சம்வாதம்

சிவம் பெரிதா விஷ்ணு பெரிதா எந்தெந்த க்ஷேத்திரங்கள் சிவன் விஷ்ணு ரூபமாகவும், விஷ்ணு லிங்க ரூபமாகவும் மாறி விட்டது, கூத்தாடியது, சிவனார் எங்கே விஷ்ணு எங்கே பிரம்மா சிறைபட்டது, ப்ரணவத்து இரகஸ்யம் அஷ்டாக்ஷரம் பஞ்சாக்ஷர இரகஸ்யம் இன்னும் அநேக இரகஸ்யம் பாரதம் பாகவதம் இராமாயணம் கீதை கம்பர் காளமேகம் யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி கதிரைவேற் பிள்ளை முதலியவர் நூலின் ஆதாரவைக் கொண்டு எழுதிய புத்தகம் 120-பக்கம் உள்ளது 8-அணா. சிலவு அணா-5. 3-புஸ்தகம் சிலவு உள்பட ரூ. 1-10. விலாசம்:

மாதவ பிரதர்ஸ், மவுண்ட் ரோட், மதராஸ்.

கேஸரியின்

லோத்ரா.

கர்ப்பாசய ரோக நிவாரிணி

இதன் உபயோகத்தால் குணம் கைக்கொண்ட பெண்மணிகள், இதை ஸ்திரீகளுக்கோர் வரப் பிரசாதினி என்றும் அதி சிரேஷ்டமான அவுஷத மென்றும், விலையில்லா ஆபரண மென்றும் சொல்லுகிறார்கள். ருதுசூலை, அகாலபஹிஷ்டி, ருது சிராவம் ஜாஸ்தி அல்லது குறைச்சலாய்ப் போவது, பஹிஷ்டை தடைபட்டுப் போவது, வெண் ரத்தப் போக்கு, கர்ப்பஸ்ராவம், அகாலப் பிரசவம், கருப்பை நழுகி விடுதல், கர்ப்பவிரணம், ருதுசூலையினால் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, சரீரம் பருத்தோ அல்லது மெலிந்தோ போவது, கணச்சூடு, சந்தான மில்லாமை, மலபத்தகம், இருமல், உப்பஸம், மேஹ ஜ்வரம் முதலிய சமஸ்த ரோகங்களும் இந்த லோத்ராவி னுபயோகத்தால் வெகு நம்பகமாய் நிவர்த்திக்கப் படும். இதன் விலை பெரிய புட்டி (12 அவுன்ஸ்) ரூ. 3–0–0
சிறிய புட்டி (6 அவுன்ஸ்) ரூ. 1–10–0

கேஸரி குடீரம், ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர், மதராஸ்.

A. **S.**

ஏ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் ஏ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

ஏ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 4 டிஜன் 1-க்கு ரூ. 2-4 டி சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 3 டிஜன் 1-க்கு ரூ. 2 டி சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

ஏ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதராஸ்

சென்னை-600 008

குஞ்சங் கட்டிய

வெள்ளை அமெரிக்கன் பட்டு.

தூய்ய வெள்ளை. நேர்த்தியாக நெசவு செய்தது. திக்கானது. 5½ முழம் நீளம். வண்ணானுக்கும் போடலாம். தினசரி துவைக்கலாம். துவைக்கத் துவைக்க அதிக பள பளப்பைக் கொடுக்கும். இப் பட்டுகள் வந்த இரண்டு மாதத்தில் இரண்டாயிரம் செலவாகி விட்டன. விலையும் மிக சொற்பமே.

விலை ரூ. 6—8—0

லக்ஷ்மிக்குப் புதிதாகச் சே
களுக்கும் பழைய சந்தா நேயர்
தபால் செலவு இனம்.

பழைய சந்தா நேயர்கள
போது சந்தா நெம்பர் குறிப்பிட

K. S. MUTHIA

EXPORT DEPAR

Post Box No. 99,

தேக ஆரோக்யமே

சிறந்த பூஷணம்!

குளிர் காலம் தொடங்கி விட்டது. குளிர் வாடை முதலியவைகளி னின்றும் தங்கள் தேக ஆரோக்யத்தைக் காப்பாற்றிக் கொள்ள தங்களிடம் ஒரு முதல் தரமான கம்பளிப் போர்வை யிருக்கிறதா? தேக சௌக்யத்தைக் கொண்டே, நமக்கு வேண்டும் மற்ற சாதனங்களைத் தேடிக் கொள்ள முடியும்.

எங்களின் வாடிக்கை நண்பர்களின் க்ஷேமத்தைக் கவனிக்க நாங்களும் கடமைப் பட்டிருப்பதால் முதல் தரமான கம்பளிப் போர்வை ஸ்டாக் செய்திருக்கிறோம். இன்றே ஒன்றுக்கு ...ர்டர் செய்யுங்கள்.

1. ஜெர்ம... கம்பிக் கரைப் போர்வை.

...யர்ந்த க... மிருதுவான நெசவு; நாலு பக்கங் கள... கம்பி... ள் போட்டது. எல்லாக் கலர்களி லு... டைக்கு...

விலை ரூ. 10—8—0

... (ஜெர்மன்) போர்வை.

...ரகளுக்கு உயர்ந்த பட்டுப் பூவேலை

விலை ரூ. 12—0—0

...ம்பளிப் போர்வை.

... கலர்கள், பட்டைப் போல் மிருது

விலை ரூ. 12—8—0

...த்தையா கம்பனி

...) தபால் பெட்டி 99

சென்னை.

... Madras and Published by K. S. Sundarar.